மாணவர்களுக்கான

# சமூகக்கல்வி

ஆண்டு 6

பாடப்பொழிப்பும், தொழிற்பாடும், பயிற்சிகளும்.



வெளியீடு :

கு. வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை நூல் வரிசை

புதிய சமூகக்கல்வி

ஆண்டு 6

4031

சாவகச்சேரி பிரதேச சபை
பொது நூல் நிலையம்
சாவகச்சேரி

# புதிய சமூகக்கல்வி

## பாடப்பொழிப்பும் தொழிற்பாடும் பயிற்சிகளும்

[ நமது பாடசாலை, நமது கிராமம் / நகரம், நம் நாடு என்பவற்றுக்கான விடயப் பொழிப்பும் தொழிற்பாடும் பயிற்சிகளும் அடங்கியுள்ள புத்தம் புதிய நூல் ]

1987 ஆம் ஆண்டிற்கான புதிய பாடத்திட்டத்தை முழுவதும் தழுவி எழுதப்பட்டது.

[ பதிப்புரிமையுடையது ]

விலை : ரூபா 17-50

வெளியீடு :

கு. வி. அச்சகம்

386, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

பக்கம்

அலகு 1 எங்கள் பாடசாலை

1. எங்கள் பாடசாலை 01
2. பாடசாலை வரலாறு 05
3. பாடசாலைச் சமுதாயம் 07
4. பாடசாலைப் பௌதீகச் சூழல் 13

அலகு 2 நமது கிராமம் / நகரம்

5. கிராமம் / நகரம் 17
6. கிராமத்தின் / நகரத்தின் பௌதிகச் சூழல் 20
7. கிராமத்தின் / நகரத்தின் வளங்கள் 24
8. கிராமத்தின் / நகரத்தின் மக்களும் மனித செயற்பாடும் 28
9. கிராமத்தின் / நகரத்தின் வரலாறு 35

அலகு 3 நம் நாடு

10. கிராமிய / நகர நிருவாகம் 36
11. தேசிய கீதம், தேசியக் கொடி, தேசிய இலச்சினை 40
12. நமது நாட்டின் வரலாறு 44
13. இந்து சமுத்திரத்து நித்திலம் 49
14. நாட்டு மக்களும் மனிதச் செயற்பாடுகளும் 54
15. வேற்றுமையில் ஒற்றுமை 60

மாதிரிகை வினாத்தாள்கள்

16. 1. 2. 3. 4 63

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகு 1

சாவகச்சேரி பிரதேச சபை
பொது நூல் நிலையம்
சாவகச்சேரி

# 1. எங்கள் பாடசாலை

[ பாடப்பொழிப்பு ]

இலங்கை அரசு பெரும்பாலான பாடசாலைகளை நடாத்தி வருகின்றது. அவற்றைவிடத் தனியார் நடாத்தும் பாடசாலைகளும் உண்டு.

நாட்டிலே தமிழ்மொழிமூலப் பாடசாலைகள், சிங்கள மொழிமூலப் பாடசாலைகள், ஆங்கிலமொழிமூலப் பாடசாலைகள் என மூவகைப் பாடசாலைகள் உண்டு.

தேர்தல் தொகுதிகள் தோறும் பல பாடசாலைகளை ஒருங்கிணைத்துக் கொத்தணி அமைப்பு முறை புகுத்தப்பட்டுள்ளது.

பிள்ளையே! உனது பாடசாலையின் பெயர் என்ன? அங்கு எத்தனையாம் ஆண்டு வரையிலான வகுப்புக்கள் உண்டு?

பாடசாலைப் பராயம் மிகவும் இனிமையானது; அங்கு நல்ல கல்வியும் ஒழுக்கமும் கற்பிக்கப்படுகின்றன.

மாணவரிடையே அறிவு, திறமை, விழுமிய மனப்பாங்கு என்பன வளர்க்கப் படுகின்றன; அன்பு, அருள், அறம் முதலிய உயர் பண்புகள் ஊட்டப்படுகின்றன.

விளையாட்டுத்துறையும் வெற்றி தோல்விகளைச் சமமாகப் பேணும் இயல்பும் போற்றப்படுகின்றன.

நல்வாழ்வுக்கான அடித்தளம் பாடசாலையில் இளமையில் அமைக்கப்படு கின்றது.

## 1 : 1 பாடசாலைக் கீதம்

[ பாடப் பொழிப்பு ]

வாரத்துக்கு ஒரு முறை பாடசாலைகளில் ஒரு தினத்தில் மாணவர் எல்லோரும் பாடசாலை முன்றிலில் குறிப்பிட்ட நேரத்தில் கூடுவர்.

அப்போது பாடசாலைக் கொடி ஏற்றப்படும்; பாடசாலைக் கீதம் பாடப்படும்.

ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் தனித்தனியே பாடசாலைக் கீதம் உண்டு.

சிவபுரம் கிராமப்பள்ளியின் பாடசாலைக் கீதத்தைப் படிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்மிகு சிவபுரம் செந்தமிழ்ப் பள்ளி
சிறப்பு டன்வா ழியரே
ஏர்மிகு சான்ருேர் உழைப்பின் பயனுய்
எழுந்திடு பள்ளி வாழியரே — சீர்மிகு


அருங்கலே புகட்டும் குரவர் அதிபர்
அனுதி னம்வா ழியரே
பொருந்திடு மாணவர் புன்மை அகன்று
புகழொ டும்வா ழியரே — சீர்மிகு

அன்பொடு சத்தியம் ஆருயிர் நேயம்
அவனி யிலோங் குகவே
இன்பொடு வையகம் என்றும் வாழ்க
இறையருள் வாழியரே — சீர்மிகு

இப்பாடசாலேக் கீதத்தில் சிவபுரம் செந்தமிழ்ப் பள்ளி வாழ்த்தப்படுகிறது. பாடசாலேயை நிறுவிய பெரியோர் நினைக்கப்படுகின்றனர்.

ஆசிரியர், அதிபர், மாணவர் வாழ்த்தப்படுகின்றனர்.

நாட்டிலே அன்பு, சத்தியம், உயிர்நேயம் என்பன ஓங்கவேண்டும் என்று கூறப்படுகின்றது. இறையருள் வாழ்த்தப்படுகின்றது.



## 1 - 2 பாடசாலேக் கொடி

[ பாடப்பொழிப்பு ]

பெரும்பாலும் பாடசாலேகள் ஒவ்வொன்றும் தத்தமக்கென ஒரு கொடியினைக் கொண்டுள்ளன.

தமிழ்ச் செல்வனின் பாடசாலேக்கும் ஒரு கொடி உண்டு.

அது மூன்று நிறங்களுடன் கூடியது, அவை மஞ்சள் ,வெள்ளே, பச்சை என்பனவாம்.

மூன்று நிறங்களும் முறையே தியாகம், உண்மை, நம்பிக்கை என்னும் மூன்று பண்புகளேக் குறிக்கின்றன. அதில் 'என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற மேற்கோள் வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளது.

உங்கள் பாடசாலேக் கொடியில் உள்ள நிறங்கள் யாவை? அவற்றின் பொருள் என்ன? மேற்கோள்வாசகம் என்ன?

... கொடியேற்றப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியகீதம் இசைக்கப்படும்.

விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா போன்ற நிகழ்ச்சிகளில் கொடி யேற்றப்படும்.

பாடசாலையோடு தொடர்புபட்ட பெரியார்களின் மறைவின் போதும், தேசத்தலைவர்களின் மறைவின் போதும் கொடி அரைத்தம்பத்தில் தாழவிடப்படும்.

## 1 - 3 பாடசாலை இலச்சினை

[ பாடப்பொழிப்பு ]




உங்கள் பாடசாலைக்கென ஓர் இலச்சினை இருக்கலாம்.

தமிழ்ச்செல்வனின் பாடசாலைக்கு அழகான ஓர் இலச்சினை உண்டு.

விரிந்த தாமரை மலரின் மீது ''என்கடன் பணி செய்து கிடப்பதே''

என்னும் மேற்கோள் வாசகத்தைப் பொறித்துள்ளார்கள்.

விரிந்த தாமரைமலர் மாணவரின் இதயத்தைக் குறிக்கின்றது.

இதயத்தில் என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற தாரக மந்திரத்தைக் குறித்துள்ளார்கள்.

தமிழ்ச்செல்வனின் பாடசாலை மாணவர்களது வாழ்வின் குறிக்கோள் பிறர் நலம் பேணி உழைத்தலாகும்.

இவ்வாறே ஒவ்வொரு பாடசாலைகளும் தத்தமக்கென உயர்ந்த குறிக்கோளை வகுத்துள்ளன.

### பயிற்சி

A. கூட்டில் உள்ள சொற்களில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து கோடிட்ட இடத்தை நிரப்புக.

| | | |
|---|---|---|
| அரைத்தம்பத்தில், | அரசு, | பாடசாலையில், |
| தமிழ்மொழி, | விளையாட்டு, | பாடசாலைக் கொடி |

1. எனது பாடசாலையை ...................................... நிருவகித்து வருகின்றது.
2. ...................................... வெற்றி தோல்விகளைச் சமமாக மதிக்கும் பண்பை வளர்க்கின்றது.
3. நல்வாழ்வுக்கான அடித்தளம் ...................................... அமைக்கப்படுகின்றது.
4. பாடசாலையில் விசேட வைபவங்கள் நடைபெறும்போது ...................................... ஏற்றப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நாடு தழுவிய துக்க நிகழ்ச்சியின்போது கொடி ........................ பறக்கவிடப் படுகின்றது.

6. எனது பாடசாலையில் ........................ மூலம் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

II. சுருக்கமான விடை தருக.

1. உமது பாடசாலையின் பெயர் என்ன ?
...........................................................................

2. உமது பாடசாலை யாரால் நிருவகிக்கப்படுகின்றது ?
...........................................................................

3. உமது பாடசாலையில் எத்தனையாம் ஆண்டுவரை வகுப்புக்கள் உண்டு ?
...........................................................................

4. உமது பாடசாலைக் கொடியில் எத்தனை நிறங்கள் உண்டு ?
...........................................................................

5. உமது பாடசாலை இலச்சினையில் உள்ள மேற்கோள் வாசகம் என்ன ?
...........................................................................

6. உமது பாடசாலை அதிபரின் பெயர் என்ன ?
...........................................................................

III. வரைந்து காட்டுக.

1. உமது பாடசாலைக் கொடி.
2. உமது பாடசாலை இலச்சினை.

## தொழிற்பாடு :

1. உமது பாடசாலைக்கீதத்தை வரிக்கிரமத்தில் எழுதுதல்.
2. பாடசாலைக்கீதத்தின் பொருளடக்கத்தை ஆசிரியரிடம் கேட்டறிதல்.
3. பாடசாலையின் கொடியின் புறவுருவத்தை வரைதல்.
4. உமது அயலில் உள்ள பாடசாலைகள் சிலவற்றின் கொடிகளின் புறவுருவங்களை வரைதல்.
5. பாடசாலை இலச்சினையின் படத்தை வரைதல்.
6. பாடசாலை இலச்சினையில் எழுதப்பட்டுள்ள மேற்கோள் வாசகத்தின் பொருளைக் கேட்டறிதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. பாடசாலை வரலாறு

[ பாடப்பொழிப்பு ]

ஒருவரது வரலாறு, அவரது வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகளைக் கால ஒழுங்கில் எடுத்துக் காட்டுகின்றது. பாடசாலை வரலாறும் அதனது பல்வேறு வகைப்பட்ட பிரதான நிகழ்ச்சிகளைக் கால ஒழுங்கில் எடுத்துரைக்கும். வரலாற்றில் பாடசாலை அமைந்துள்ள ஊர் / நகரம், தொடங்கிய காலம், பாடசாலைப் பெயர், பாடசாலையின் தோற்றத்துக்குக் காரணமாக இருந்தவர்கள், உதவிய நிறுவனங்கள், திறப்புவிழா, கட்டட விளையாட்டிட வசதிகள், மாணவர், ஆசிரியர் தொகை, வருகை தந்த பெரியார், புகழ் பெற்ற பழைய மாணவர்கள், பாடசாலையின் சேவை முதலியன இடம் பெறும்.

பாடசாலை வரலாற்றைத் தொகுப்பதற்குப் பாடசாலையில் உள்ள சம்பவத் திரட்டுப் புத்தகம், மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் பாடசாலைத் திறப்பு விழா, கட்டடத் திறப்புவிழா முதலிய நிகழ்ச்சிகளின் போது திரை நீக்கம் செய்து வைத்த கல்வெட்டுகள் முதலியன உதவலாம். கிராமத்து முதியோர், முன்னைநாள் அதிபர், ஆசிரியர் முதலியோர் தரும் வாய்மொழி மூலமான தகவல்களும் பயன்படும். தலபுராணங்கள் கோயில் குறிப்புக்கள், விசேட வெளியீடுகள் முதலியனவும் உபயோகப்படும்.

## பயிற்சி

I. பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்து இணைத்து எழுதுக.

1. ஒருவரது வாழ்க்கை வரலாறு ..............................
..............................
2. பாடசாலை வரலாற்றைத் தொகுப்பதற்கு ..............................
..............................
3. வரலாற்றை எழுதுவதற்கு ..............................
..............................
4. தலபுராணங்கள் என்று கூறப்படுவன ..............................
..............................
5. கிராமப்புறப் பாடசாலைகளில் ..............................
..............................
6. ஒரு பாடசாலைக்கு ஆய்வுகூடம், விளையாட்டிடம் ..............................
..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. வாய்மொழி மூலம் கிடைக்கும் தகவல்களும் உதவுகின்றன.

ii. சம்பவித்திரட்டுப் புத்தகம் பெரிதும் பயன்படுகின்றது.

iii. கால ஒழுங்கில் அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறும்.

iv. மிகவும் இன்றியமையாதனவாக இருக்கின்றன.

v. கோயில்களின் வரலாற்றை வெளிப்படுத்தும் நூல்களாகும்.

vi. மாணவர்களுக்கு வேண்டிய சகல வசதிகளும் செய்து கொடுக்க அரசு முயலுகின்றது.

**II.** சுருக்கமான விடை தருக.

1. வரலாற்றை அறியப் பாடசாலை அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய சாதனம் ஒன்று கூறுக.

..................................................................................................

2. பாடசாலைச் சுவரில் பொறிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டின் பயன்பாடு என்ன ?

..................................................................................................

3. உங்கள் பாடசாலையில் அமைந்துள்ள நினைவுச் சின்னம் ஒன்று கூறுக.

..................................................................................................

4. உமக்குத் தெரிந்த தலபுராணம் ஒன்றின் பெயர் என்ன ?

..................................................................................................

5. உமது பாடசாலை அதிபரின் பெயர் கூறுக.

..................................................................................................

6. உமது வகுப்பில் எத்தனை மாணவர்கள் கல்வி கற்கின்றனர் ?

..................................................................................................

**III.** வரைந்து காட்டுக.

1. உமது பாடசாலையின் படம்.

## தொழிற்பாடு

1. நீர் கல்வி கற்கும் பாடசாலையின் வரலாற்றை எழுதுவதற்கு வேண்டிய பின்வரும் குறிப்புகளைத் திரட்டிக் கொள்க.

(i) பாடசாலைக் கிராமத்தின் பெயர் :

..................................................................................................

(ii) பாடசாலை தொடங்கப்பட்ட தேதி :

..................................................................................................

(iii) தொடக்ககால ஆசிரியர் மாணவர் தொகை :

..................................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) தொடக்ககால அதிபர் / தலைமையாசிரியர் பெயர் :

..........................................................................................

(v) இடவசதி :

..........................................................................................

(vi) இன்றைய மாணவர் + ஆசிரியர் தொகை :

..........................................................................................

II. கிராமத்து முதியவர் ஒருவருடன் / பாடசாலையில் கல்விபயின்ற முதியவர் ஒருவருடன் உரையாடல்.

III. அட்டவணையில் தரப்பட்ட தலைப்புகளின்கீழ் உமது பகுதியில் உள்ள பாடசாலைகளை வகுத்தல்.

| அரசாங்கப் பாடசாலை | தனியார் பாடசாலை | சைவசமயம் | கிறித்தவசமயம் | இஸ்லாம் சமயம் |
|---|---|---|---|---|
| .................... | .................... | .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... | .................... | .................... |

IV. உமது பாடசாலையின் வளர்ச்சி குறித்து ஒரு சிறு கட்டுரை எழுதுதல்.

# 3. பாடசாலைச் சமுதாயம்

( பாடப் பொழிப்பு )

உங்கள் இல்லத்தில் அம்மா, அப்பா, நீர் மற்றும் உடன் பிறந்தோர் இருக்கலாம். எல்லோரையும் ஒன்று சேர்த்துக் குடும்பம் என்று கூறுகின்றோம்.

குடும்பம் ஒரு சிறிய சமுதாயம். அச்சிறிய சமுதாய உறுப்பினர்களாகிய உங்களுக்கு உணவு, உடை, உறையுள் முதலிய அடிப்படைத் தேவைகளும் நல்லொழுக்கப் பயிற்சி, பாதுகாப்பு என்பனவும் குடும்பத்தின் மூலமே கிடைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிப்பருவம் வந்ததும் நீங்கள் பாடசாலையில் சேர்க்கப்படுகின்றீர்கள். அப்போது நீங்கள் பாடசாலைச் சமுதாய உறுப்பினர் ஆகின்றீர்கள்.

## 3 : 1 பாடசாலைச் சமுதாயத்துப் பல்லினப் பண்பு

[ பாடப் பொழிப்பு ]

எமது நாட்டுப் பாடசாலைகளில் சில ஆண்கள் படிக்கும் பாடசாலைகள். இன்னும் சில பெண்கள் மட்டும் படிக்கும் பாடசாலைகள். வேறுசில ஆண், பெண் கலவன் பாடசாலைகள். உமது பாடசாலை இவற்றுள் ஒன்றாக இருக்கலாம்.

மாணவர்களிடையே வயது, உயரம், நிறம் என்பவற்றில் வேறுபாடுகள் இருக்கும். அன்றியும் சைவ சமயத்தினர், கிறீத்தவ சமயத்தினர், இஸ்லாம்சமயத்தினர் என்ற பிரிவுகளும் காணப்படலாம்.

இவ்வாறு பால், வயது, உயரம், நிறம், சமயம் முதலிய பல்லினப் பண்புகள் இருந்தபோதும் மாணவர் என்ற ஒருமைப்பாடு உங்களிடையே உண்டு.

## 3 - 2 பாடசாலைச் சமத்துவமும் ஒற்றுமையும்

[ பாடப் பொழிப்பு ]

உங்களிடையே பல்வேறு இயல்புகள் காணப்பட்ட போதிலும் 'கல்விகற்றல்' என்னும் பொதுவான தேவை எல்லோருக்கும் பொதுவான ஒன்றாக — உயிர் நாடியாக இருக்கின்றது. அதன்முன் உங்கள் வேறுபாடுகள் மறைந்துவிடுகின்றன. கல்விகற்றல் இலட்சியத்தை அடைய முயற்சிக்கின்றீர்கள். அதனால் ஒவ்வொருவரிடமும் சகோதர மனப்பான்மை, தோழமை உணர்வு, ஒத்துழைப்பில் ஆர்வம் என்பன மேம்பட்டு விளங்குகின்றன. இவ்வாறான சீரிய பண்பை வளர்ப்பதற்கு பாடசாலைக்கொடி, கீதம், இலச்சினை, மேற்கோள் வாசகம் முதலியன பெரிதும் உதவுகின்றன.

## 3 - 3 பாடசாலை மாணவர்களுடைய உரிமைகளும் கடமைகளும்

[ பாடப் பொழிப்பு ]

பாடசாலைச் சமூகத்தில் இருபகுதியினர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். ஒரு பகுதியினர் அதிபரும் ஏனைய ஆசிரியர்களுமாவர். மற்றப்பகுதியினர் மாணவர்கள். இருபகுதியாருக்கும் கடமைகள் உண்டு; உரிமைகளும் உண்டு. கடமையே உரிமையின் தாய் என்று பெரியோர்கள் கூறுவர். இரண்டும் பிரிக்க முடியாதவை. கடமைகள் ஒழுங்காக நிறைவேற்றப்பட்டு வந்தால் உரிமைகளும் பாதுகாக்கப்படும். பாடசாலை முன்னேற்றம் அடைய வேண்டுமாயின் இருபகுதியாரும் உரிமைகளையும் கடமைகளையும் அறிந்து அனுசரித்து நடத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் கல்வி பயிலும் உரிமை மாணவர்களுக்கு உண்டு. ஒருவரோ டொருவர் சமத்துவமாக இருக்கவும், ஒருவருக்கொருவர் இயன்றளவு உதவி செய்யவும் உரிமையுண்டு. தமது நற்பெயரைப் பாதுகாத்துக் கொள்ளும் அதே வேளையில் பாடசாலையின் நற்பெயரையும் பாதுகாத்துக் கொள்ளும் உரிமையும் உண்டு.

மாணவர்களுக்காய கடமைகளும் பலவாகும். பாடசாலை உடைமைகளைப் பாதுகாத்தல், பாடசாலைச் சூழலைப் பாதுகாத்தல், சகமாணவர்களுடன் அன்பாகப் பழகுதல், அதிபர், ஆசிரியர் ஆகியோருடன் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொள்ளுதல், நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தல், ஆர்வத்தோடு கற்றல், கற்ற வற்றை மீட்டுப் படித்தல், பாடசாலை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுதல், அதிபர், ஆசிரியர் உரிமைகளுக்குக் கெடுதல் ஏற்படாது நடத்தல் முதலியன அவற்றுள் சிலவாகும்.

## 3 : 4 பாடசாலை நிருவாகம்

[ பாடப் பொழிப்பு ]

ஒவ்வொரு பாடசாலையும் மாணவர்களுக்குச் சிறந்த கல்வியையும் உயர்ந்த ஒழுக்கத்தையும் அளிப்பதனையே தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளன. சீரான நிருவாகம் இருந்தால்தான் அதனைச் சாதிக்க முடியும். பாடசாலை நிருவாகத்திற்கு அதிபரே பொறுப்பாக இருக்கிறார். அவர் தலைமையின் கீழ் பிரதி அதிபர், உதவி அதிபர், வகுப்பாசிரியர், மாணவர்தலைவர், வகுப்புத் தலைவர், மாணவர் முதலி யோரும் மற்றும் எழுதுவினைஞர், ஆய்வு கூட உதவியாளர், ஊழியர், காவலர் முதலியோரும் உதவி புரிகின்றனர்.

ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள், என்றிவர்களுக்கெல்லாம் உரிமை களும் கடமைகளும் உண்டு. அவைகளும் பேணப்படவேண்டும்.

இவை அனைத்தையும் ஒருமுகப்படுத்தி நடத்துவதற்கு விதிகளும் சம்பிர தாயங்களும் உதவுகின்றன.

விதிகள் பெரும்பாலும் பாடசாலைச் சூழலுக்கும் தேவைகளுக்கும் பொருத்த மானவைகளாக வகுக்கப்படும். பெரும்பாலான பாடசாலையின் விதிகள் மாணவர் முன்னேற்ற அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

விதிகளும் சம்பிரதாயங்களும் பின்வருவனவற்றைச் சிறப்பமிசங்களாகக் கொண்டிருக்கும். அவை கடவுள் வழிபாட்டில் ஈடுபடுதல் நேரம் தவறாமை, ஒழுங்கான வரவு, சீருடையணிதல், பாடசாலை முடிவடையுமுன் பாடசாலைக்கு வெளியே செல்வதாயின் அதிபர் / ஆசிரியர்களின் அனுமதி பெற்றுச் செல்லுதல், பாடசாலையின் நற்பழக்கவழக்கங்களைப் பேணுதல், பெரியோர்களுக்கு மதிப்பளித் தல், பாடசாலையின் கொடி, கீதம் இவற்றினை ... [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி

I. அடைப்புக்குறிக்குள் உள்ளவற்றில் இருந்து கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.

1. ஒரு வீட்டில் வசிக்கும் தந்தை, தாய், பிள்ளைகள் முதலியோர் .................................... என்று அழைக்கப்படுவர்.
   ( சமூகம் / குடும்பம் / இளைஞர் / உறவினர் )

2. உணவு, உடை, உறையுள் என்பன .................................... தேவை என்று அழைக்கப்படும்.
   ( அவசிய / விசேட / அடிப்படை / வாழ்க்கை )

3. பாடசாலை மாணவர்களுக்கிடையேயுள்ள பொதுத்தேவையென்று .................................... சிறப்பித்துக் கூறப்படும்.
   ( விளையாட்டு / தடையூசி போடுதல் / அம்மைப்பால் கட்டுவித்தல் / கல்வி கற்றல் )

4. உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு .................................... ஒழுங்காக நிறைவேற்றப்படுதல் வேண்டும்.
   ( கடமைகள் / வீட்டுவேலைகள் / போட்டிகள் / விழாக்கள் )

5. பாடசாலை நிருவாகத்துக்கு .................................... பொறுப்பாக இருக்கின்றனர்.
   ( ஆசிரியர் / பெற்றோர் / அதிபர் / மாணவர் )

6. ஒவ்வொரு மாணவனும் பாடசாலைக்கு .................................... வருதல் வேண்டும்.
   ( வாகனங்களில் / சீருடையில் / நேரம்தவறாது / சுறுசுறுப்புடன் )

II. முதற்பகுதியுடன் மிகவும் பொருத்தமான இரண்டாம் பகுதியை இணைத்து எழுதுக.

முதற்பகுதி

1. சிறுவர்களுக்கு நல்லொழுக்கப்பயிற்சி கிடைக்குமிடம் : ....................................
....................................

2. ஆண்களும் பெண்களும் சேர்ந்து கல்வி கற்கும் பாடசாலை : ....................................
....பாடசாலை....................................

3. பால், வயது, உயரம், நிறம், சமயம் முதலியவற்றில் மாணவர்களுக்கிடையேயுள்ள வேறுபாடு : ....................................

4. மாணவரிடையே தோழமை உணர்வு, சகோதர மனப்பான்மை என்பவற்றை வளர்க்க உதவுவன : ....................................

5. பாடசாலை சமூகத்தில் உள்ள இரு பகுதியினர் : ....................................
....................................

6. மாணவர்களின் கடமைகளுள் ஒன்று : ....................................
....................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கடமைகளையும் உரிமைகளையும் ஒழுங்குபடுத்தி நடத்த உதவுவது ! ........................
.............................................................................................................................

8. பள்ளிக்கூட நேரங்களில் வெளியே செல்ல வேண்டுமாயின் செய்ய வேண்டியது !
.............................................................................................................................

இரண்டாம் பகுதி

1. பல்லினப்பண்பு
2. மாணவர், அதிபராசிரியர்
3. குடும்பம்
4. பாடசாலைக்கொடி, கீதம் இலச்சினை,
5. கலவன் பாடசாலை
6. அதிபரிடம் அனுமதி பெறவேண்டும்
7. விதிகளும் சம்பிரதாயங்களும்
8. பாடசாலை உடைமைகளைப் பாதுகாத்தல்

## தொழிற்பாடு :

1. உமது பாடசாலை மாணவர் தொகையை அட்டவணைப்படுத்துதல்.

| ஆண்டு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 6 | ........................ | ........................ | ........................ |
| 7 | ........................ | ........................ | ........................ |
| 8 | ........................ | ........................ | ........................ |

2. மாணவர்களுக்குரிய கடமைகள் உரிமைகள் என்பவற்றை அட்டவணைப்படுத்துக.

| கடமைகள் | உரிமைகள் |
|---|---|
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| | பெயர் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| அதிபர் | | | |
| வகுப்பாசிரியர் | | | |
| மாணவர் தலைவர் | | | |
| சிற்றூழியர் | | | |

4. உங்கள் பாடசாலை விதிகளையும் சம்பிரதாயங்களையும் எழுதுதல்.

| | விதிகள் | சம்பிரதாயங்கள் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |

5. வரைந்து காட்டுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. பாடசாலைப் பௌதிகச் சூழல்


[ பாடப் பொழிப்பு ]

பாடசாலைகள் கிராமங்களிலும் நகரங்களிலும் அமைக்கப்படுகின்றன; சில கிராமங்கள் கடற்கரைப் பிரதேசத்தில் அமைந்திருக்கலாம். சில பயிர்ச்செய்கைப் பிரதேசம் போன்ற வெவ்வேறு பகுதிகளில் அமைந்திருக்கலாம். கிராமங்கள் படிப்படியாக வளர்ச்சி அடைந்து நகரங்களாக மாறுகின்றன, சந்தை, துறைமுகம், தொழிற்சாலை, பிரசித்தி பெற்ற வழிபாட்டுத்தலம் முதலியவற்றுள் ஒன்றோ பலவோ நகரங்கள் உருவாவதற்கு உதவலாம். கிராமம் நகரம் முதலியன குளம், கிணறு, ஆறு, அருவி முதலியவற்றின் மூலம் நீர்வசதியைப் பெறுகின்றன. கிராமங்களில் வளமான மண் பயிர்ச்செய்கை தோட்டச் செய்கை முதலியவற்றுக்கு உதவுகின்றன.

## 4 - 1 பாடசாலையின் அமைவு

[ பாடப் பொழிப்பு ]

ஒரு பாடசாலை அமைந்திருக்கு இடத்தைக் குறிப்பிடும் போது குறிப்பிட்ட கிராமத்தில் உள்ள கோயில், தெரு, சந்தி முதலியவற்றின் அண்மையில் அமைந்துள்ளது என்று கூறுவது சாதாரண முறை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த கிராமத்தில் இன்ன திசையில் இருக்கின்றது என்று குறிப்பிடுவது விசேடமான முறை. ஒரு கிராமத்தின் அல்லது பாடசாலையின் அமைவிடத்தை வரையும் போதும் திசை பற்றிய அறிவு அவசியம்' படங்களில் மேற்பகுதி வடக்குத் திசையாகும். படத்தை வரைவோர் அதன் ஒரு புறத்தில் ↑ என்று திசையைக் குறிப்பிடுவது வழக்கம்.

வரைபடங்களில் பாடசாலை, வீதி, ஒழுங்கை, ஆலயம், மருத்துவமனை முதலியவற்றைக் குறிப்பிட விசேட அடையாளங்கள் இடப்படும். அளவுப் பிரமாணமும் கணிக்கப்படும்.

## 4 - 2 பாடசாலை வளவின் பௌதிக உறுப்புகள்

[ பாடப் பொழிப்பு ]

உங்கள் பாடசாலையின் நிலம் சமதரையாகக் காணப்படலாம். அல்லது மேட்டுப் பாங்கானதாய் இருக்கலாம். சில சமயம் சரிவான தோற்றம் உடையதாகவும் இருக்கக் கூடும். மலைப்பாங்கு சதுப்புநிலம் இவற்றுள் ஒன்றாகவும் இருக்கலாம். நீர்வசதி உள்ளதாகவும் அற்றதாகவும் இருக்கலாம்.

ஒரு பிரதேசத்தின் நிலத்தில் காணப்படும் பல்வேறு இயல்புகள் அந் நிலத்தின் பௌதிக உறுப்புகள் எனப்படும். நிலத்தின் தன்மைக்கு ஏற்றதாக நீர் அமைந்திருக்கும். உவர் நிலத்து நீர் உப்புச்சுவை உடையதாகக் காணப்படும்.

## 4 - 3 மரங்கள்

[ பாடப் பொழிப்பு ]

பாடசாலைக் காணியில் இயற்கையாகவே சில மரங்கள் முளைத்து நிற்கும். மா, பலா, வாழை முதலிய கனிதரு மரங்கள் நாட்டப்பட்டிருக்கும். தென்னை, பனை முதலிய மரங்களும் நிற்கலாம். தோடை, எலுமிச்சை முதலிய மரங்களும் வளர்ந்து நிற்கும். புல் பூண்டுகளும் ஓங்கி வளர்ந்திருக்கும்.

தாவரங்கள் உருவம் பருமன் முதலியவற்றில் வேறுபட்டிருப்பினும் வேர், தண்டு, கிளை, இலை, பூ, கனி, உச்சியரும்பு, கக்கவரும்பு முதலிய பகுதிகள் எல்லாவற்றுக்கும் பொதுவானதாகக் காணப்படும்.

### பயிற்சி

1. சரி பிழை கூறுக.

1. கிராமங்கள் படிப்படியாக வளர்ச்சி அடைந்தே நகரங்கள் தோன்றின. (............)
2. கிழக்குத்திசை கோணத்திசைகளுள் ஒன்றாகும். (............)
3. படங்களின் மேற்பகுதி தெற்குத் திசையாகும். (............)
4. ... நன்னீர் கிடைக்கும். (............)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பாடசாலைக் கட்டடங்கள் சமதரைகளிலேதான் அமைக்கப்படுகின்றன. (.......... )

6. நிலத்தில் காணப்படும் பல்வேறு இயல்புகள் அந்நிலத்தின் பௌதிக உறுப்புகள் என்று அழைக்கப்படும். (..........)

7. தாவரம் என்னும் பிரிவின் கீழ் புல் பூண்டு முதலியனவும் அடங்கும். (..........)

8. மா, பலா, வாழை முக்கனிகள் என்று கூறப்படும். (..........)

9. வரைபடங்களில் நீள அகலங்கள் உள்ள உள்ளவாறே வரையப்படுகின்றன. (..........)

10. பாடசாலைகள் எப்பொழுதும் கோவில்களின் அயலிலேதான் அமைக்கப்படுகின்றன. (..........)

II. ஒரு சொல்லில் விடை தருக:

1. உமது பாடசாலை அமைந்துள்ள கிராமம் / நகரம் எது?

..........................................................................................

2. உமது பாடசாலை நிலம் எப்படிப்பட்டது?

..........................................................................................

3. உமது பாடசாலைக்கு நீர் எப்படிக் கிடைக்கின்றது?

..........................................................................................

4. உமது பாடசாலை, கிராமத்தின் எத்திசையில் அமைந்துள்ளது?

..........................................................................................

5. உமது பாடசாலை அயலில் ஆலயம் உண்டா?

..........................................................................................

6. உமது பாடசாலையில் தோட்டம் உண்டா?

..........................................................................................

7. அங்கு கிடைக்கக் கூடிய பழம் ஒன்று கூறுக.

..........................................................................................

8. உமது பாடசாலை நிலத்தின் மண் எப்படிப்பட்டது?

..........................................................................................

III. வரைந்து காட்டுக:

1. பாடசாலைக் கிராமம்.

2. ஒரு தாவரத்தின் முக்கிய பாகங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்பாடு

1. பாடசாலைக் காணியின் எல்லைகளைக் குறித்தல்.

   1. வடக்கு : ..............................................
   2. தெற்கு : ..............................................
   3. கிழக்கு : ..............................................
   4. மேற்கு : ..............................................

2. உமது பாடசாலைக்கு அயலில் பின்வருவன உண்டெனில் அவற்றுக்கு எதிரே '√' அடையாளமிடுக. திசைகளையும் குறிக்குக.

| இடங்கள் | உண்டு / இல்லை | திசை |
|---|---|---|
| கோயில் | .................... | .................... |
| வீடுகள் | .................... | .................... |
| அஞ்சலலுவலகம் | .................... | .................... |
| சந்தை | .................... | .................... |
| புகைவண்டி நிலையம் | .................... | .................... |

3. உங்கள் பாடசாலைக் காணியில் உள்ள மரங்களை அட்டவணைப்படுத்துக.

| | |
|---|---|
| 1 | .............................................. |
| 2 | .............................................. |
| 3 | .............................................. |
| 4 | .............................................. |
| 5 | .............................................. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகு 2

# 5. கிராமம்/நகரம்

## கிராமத்தின்/நகரத்தின் அமைவிடம்

[பாடப்பொழிப்பு]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிடத்தின் அமைவிடத்தைச் சரியாகக் கூறுவதற்குச் சில விபரங்களைத் தெரிந்திருத்தல் வேண்டும். அவை மாகாணம், மாவட்டம், தேர்தல் தொகுதி, உதவி அரசாங்க அதிபர் பிரிவு, கிராம சேவையாளர் பிரிவு என்பனவாகும்.

முற்பக்கத்தில் உள்ள இலங்கைப் படத்தைப் பாருங்கள்! அதில் இலங்கையின் ஒன்பது மாகாணங்களும் இருபத்தைந்து மாவட்டங்களும் மற்றும் பிரதான நகரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

கொழும்பு இலங்கையின் தலைநகரமாகும். அது மேல் மாகாணத்தில் இருக்கின்றது. கொழும்பு நகருடன் ஏனைய நகரங்களும் வீதிகளால் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன. உமது மாவட்டத்தின் பெயர் என்ன? உமது மாவட்டத்தில் உள்ள பிரதான நகரம் எது? அந்த நகரத்துக்கு எத்திசையில் உமது கிராமம் / நகரம் இருக்கின்றது? படத்தைப் பார்த்து விடை கூறுங்கள்.

## பயிற்சி

I. சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.

1. இலங்கையில் உள்ள மாகாணங்களின் தொகை:
   (i) 8 (ii) 9 (iii) 6 (iv) 10
2. இலங்கையில் உள்ள மாவட்டங்களின் தொகை:
   (i) 9 (ii) 25 (iii) 24 (iv) 30
3. இலங்கையின் தலைநகர்:
   (i) அநுராதபுரம் (ii) யாழ்ப்பாணம் (iii) கொழும்பு (iv) கண்டி
4. நல்லூர் என்னும் நகரம் அமைந்துள்ள மாவட்டம்:
   (i) யாழ்மாவட்டம் (iii) கிளிநொச்சி மாவட்டம்
   (ii) முல்லைமாவட்டம் (iv) மன்னார் மாவட்டம்
5. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைக் கொண்ட மாகாணம்:
   (i) கிழக்கு மாகாணம் (iii) வடக்கு மாகாணம்
   (ii) மேற்கு மாகாணம் (iv) மத்திய மாகாணம்
6. மாவட்டத்திற்கு அடுத்ததாக உள்ள பிரிவு:
   (i) கிராம சேவை அலுவலர் பிரிவு (iii) தேர்தல் தொகுதி
   (ii) உதவி அரசாங்க அதிபர் பிரிவு (iv) கோயிற்பற்று

II. சுருக்கமான விடை தருக.

1. உமது கிராமத்தின் அல்லது நகரத்தின் பெயர் என்ன?

......................................................................

2. அது எந்த மாகாணத்தில் உள்ளது?

......................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அது எந்த மாவட்டத்தைச் சேர்ந்தது ?

.......................................................................................................................................

4. உமது பகுதிக் கிராமசேவை அலுவலர் பெயர் என்ன ?

.......................................................................................................................................

5. உமது பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் யார் ?

.......................................................................................................................................

6. உமது பிரிவின் உதவி அரசாங்க அதிபர் பெயர் என்ன ?

.......................................................................................................................................

III. வரைந்து காட்டுக:

1. இலங்கைப் படம் வரைதல்.
2. அதில் மாகாணங்கள் மாவட்டங்களைக் குறித்தல்.


## தொழிற்பாடு

1. கிராமத்தின் / நகரத்தின் விபரங்களைத் திரட்டுதல்.

| | | |
|---|---|---|
| 1. | கிராமத்தின் பெயர் / நகரத்தின் பெயர் | ............................ |
| 2. | அமைந்துள்ள மாகாணம் | ............................ |
| 3. | " மாவட்டம் | ............................ |
| 4. | " தேர்தல்தொகுதி | ............................ |
| 5. | " உதவி அரசாங்க அதிபர் பிரிவு | ............................ |
| 6. | கிராமசேவையாளர் பிரிவு | ............................ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கிராமத்தின் / நகரத்தின் புறவுருவத்தை வரைந்து எல்லைகளைக் குறித்தல்.




# 6. கிராமத்தின்\ நகரத்தின் பௌதிகச் சூழல்


[ பாடப்பொழிப்பு ]

கிராமம் அல்லது நகரத்தில் நிலம் ஒரே தன்மை உடையதாக இருப்பதில்லை. ஒரே பிரதேசத்தில் காணப்படும் நிலத்தின் பல்வேறு இயல்புகளை அதன் பௌதிக இயல்புகள் என்று கூறுவார்கள்.

## 6 - 1 தரைத்தோற்றங்கள்

[ பாடப்பொழிப்பு ]

ஒரு பிரதேசத்தின் உயரத்துக்கு ஏற்ப வேறுபட்டுத் தோன்றும் நில உறுப் புக்களின் அமைப்பு தரைத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பகுதிகளில் சமநிலம் காணப்படும். சில பகுதிகள் பள்ளமாகவும் மேடாகவும் காணப்படும். இன்னுஞ் சில சதுப்புநிலமாக இருக்கும்; மேலும் மலை, குன்று முதலியவற்றைக் கொண்டும் இருக்கும்.

குடா, துறைமுகம், முனை, களப்பு, அளங்கள் என்பனவும் காணப்படலாம்.

மூன்று பக்கத்திலும் நிலமாகவும் ஒரு பக்கம் மட்டும் கடலுடன் சேர்ந்திருக்கும் பகுதி குடா எனப்படும்.

சில குடாக்களில் கப்பல்கள் வந்து தங்கிச் செல்லும் வசதியும் இருக்கும்; அத்தகைய குடாக்கள் துறைமுகம் எனப்படும். மூன்று பக்கமும் நீரினால் சூழப்பட்டு கடலினுள் நீண்டிருக்கும் பகுதி முனை எனப்படும்.

கடற்கரையில் உள்ள ஆழங்குறைந்த சில நீர் நிலைகள் கடலோடு தொடுக்கப்பட்டும் சில சில திடல்களால் கடலில் நின்று பிரிக்கப்பட்டும் இருப்பதுண்டு. அத்தகையவற்றை களப்பு என்று கூறுவர்.


கடற்கரையை அடுத்துக் கடலுடன் தொடர்பற்ற உப்பு நீர்ப்பள்ளங்கள் காணப்படும். அவை அளங்கள் என்று கூறப்படும்.

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட சிறிய நிலப்பரப்பு தீவு என்று கூறப்படும்,

## 6 : 2 கிராமத்தின் / நகரத்தின் காலநிலை

[ பாடப் பொழிப்பு ]


சில நாள்களில் மிகுதியான வெயில் காணப்படலாம். சில நாள்களில் வானில் கருமேகங்கள் சூழ்ந்திருக்கலாம். மற்றொரு நாள் பலத்த காற்றுடன் மழை பெய்யலாம். வேறொரு சந்தர்ப்பத்தில் தொடர்ந்து மப்புமந்தாரம் இருக்கலாம். இவ்வாறாக, ஒரு இடத்தில் காணப்படும் வெப்பநிலை, மேகங்களின் இயல்பு, மழை வீழ்ச்சி, ஈரப்பதன் முதலியவற்றை வானிலை என்று கூறுவர். அதாவது, குறுகியகால அளவில் வளிமண்டலத்தில் நிலவும் தன்மை வானிலை என்று கூறப்படும். வானிலையை அடிப்படையாகவைத்து ஒரு பிரதேசத்தின் காலநிலை கணிக்கப்படுகின்றது. ஒரு பிரதேசத்தின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானிலை விபரங்களின் சராசரித் தொகுப்பு காலநிலை என்று கூறப்படும்.

மழையின் அளவை அறிந்து கொள்வதற்கு மழைமானி உதவுகின்றது. வெப்பத்தை அளப்பதற்கு வெப்பமானி துணைபுரிகின்றது. காற்றின் வேகம், ஈரப்பதன் முதலியவற்றை அளப்பதற்கும் கருவிகள் உண்டு.



## பயிற்சி

I. சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுக.

1. நிலத்தின் மேற்பரப்பு எங்கும் ஒரே மட்டமாகக் காணப்படும். (..............)
2. கடலுள் நீண்டிருக்கும் நிலப்பகுதி முனை என்று கூறப்படும். (..............)
3. ஒரு பிரதேசத்தின் வானிலை விபரங்களின் சராசரித் தொகுப்பினைக் காலநிலை என்பர். (..............)
4. யாழ்ப்பாண தீபகற்பத்தினைச் சிற்றாறுகள் வளமுறச் செய்கின்றன. (..............)
5. இலங்கையில் உள்ள மலைகளில் பேதுருதாலகாலை அதிகம் உயரமுடையது. (..............)
6. வெப்பமானியின் உதவியால் மழையை அளக்கின்றார்கள். (..............)
7. உயரம் குறைந்த மலையைக் குன்று என்று அழைப்பர். (..............)

...... உருவாகின்றன. (..............)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II. பொருத்தமான சொல் / சொற்றொடரின் கீழ்க் கோடிடுக.

1. ஒரு பிரதேசத்தில் உயரத்துக்கு ஏற்ப வேறுபட்டுத் தோன்றும் நில உறுப்புக்களின் அமைப்பை [ பௌதிக இயல்பு / தரைத்தோற்றம் / இயற்கை அமைப்பு ] என்பர்.
2. மூன்று பக்கமும் நிலமாகவும் ஒரு பக்கம் மட்டும் கடலுடன் சேர்ந்து இருக்கும் பகுதி [ குடா / அலம் / களப்பு ] எனப்படும்.
3. வளியில் உள்ள நீராவியின் அளவு [வெப்பநிலை / ஈரப்பதன் / காலநிலை ] எனப்படும்.
4. அசைதல், அசையாது நிற்றல் ஆகிய இருநிலைகளும் [ நீருக்கு / வளிக்கு / தீக்கு ] உண்டு.
5. நான்கு பக்கமும் கடல் சூழ்ந்த சிறிய நிலப்பரப்பு [ தீபகற்பம் / நீரிணை / தீவு ] எனப்படும்.

III. வரைந்து காட்டுக.

மழைமானியின் படம்.

## தொழிற்பாடு

I. பின்வருவனவற்றுக்குச் சுருக்கமான விளக்கம் தருக.

துறைமுகம் : ..........................................................................................

குன்று : ..........................................................................................

சமநிலம் : ..........................................................................................

முனை : ..........................................................................................

II. ஒரு கிழமையில், உங்கள் பிரதேசத்தில் காணப்படும் வானிலை அவதானிப்பினை அட்டவணை செய்தல்.

| | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| வெயில் மிகுதியாக உண்டா / இல்லையா | | | | | | | |
| வானில் கருமேகம் உண்டா / இல்லையா | | | | | | | |
| மழை உண்டா / இல்லையா | | | | | | | |
| காற்று வேகமாக வீசுதா / இல்லையா | | | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்தின் / நகரத்தின் வளங்கள்

[ பாடப் பொழிப்பு ]

சூழலில் பல பொருள்கள் காணப்படுகின்றன. அவற்றுட் சில சில இயற்கைப் பொருள்கள், சில செயற்கைப் பொருள்கள். இயற்கையாகவே உள்ளவற்றை இயற்கைப் பொருள்கள் என்கின்றோம். வளி, நீர், மண், கனியம், மரஞ் செடி, கொடி என்பன அவ்வகையின.

புதிதாக ஆக்கப்படுவன செயற்கைப் பொருள் எனப்படும். வீடுகள் தளபாடங்கள் போல்வன அத்தகையன. வளி, நீர், மண், கனியம், மரஞ் செடி, கொடி என்பன வளங்கள் என்று கூறப்படும்.

## 7 : 1 பிரதேசத்தின் வளங்கள்

[ பாடப் பொழிப்பு ]





இலங்கையின் இயற்கைப் பிரதேசங்கள்

வளியும் நீரும் மனிதனுடைய அடிப்படைத் தேவைப் பொருள்களாகும், தூயவளி எம்மைச் சூழ்ந்து இருக்கின்றது. மனிதன் மற்றும் விலங்கு முதலியவற்றில் இருந்து வெளியேறும் காபனீரொட்சைட்டாலும், தொழிற்சாலைகளில் இருந்து வரும் அசுத்தமான காற்று முதலியவற்றாலும் வளி மாசு அடைகிறது. தகனத்தின் போது உண்டாகும் காபனீரொட்சைட்டும் வளியை மாசுபடுத்துகின்றன.

நீர், பருகுவதற்கும் உணவுத் தேவைக்கும் பயன்படுகின்றது. சுத்தம் பேணுவதற்கும் உதவுகின்றது. தாவரம் விலங்கு முதலியவற்றுக்கும் நீர் அவசியம் வேண்டியிருக்கின்றது. கிணறு, குளம், ஓடை, அருவி, ஆறு முதலியனவற்றின் மூலம் நீர் கிடைக்கின்றது. பெரிய நகரங்களில் நீர் குழாய் மூலம் விநியோகப்படுகின்றது. நீர் பல வழிகளால் மாசடைகின்றது. கிணற்று நீர் எப்படி அழுக்கடைகின்றது? அழுக்கு நீரினால் வயிற்றுளைவு வயிற்றுக் கடுப்பு, கொலரா முதலிய நோய்கள் உண்டாகின்றன.

மண் உயிரினங்கள் தங்கி வாழ்வதற்கு இடமளிக்கின்றது. மனிதனின் உணவு உடை முதலியவற்றுக்கான தாவரங்கள் வளர்ந்து பயன் தருவதற்குரிய இடமாகவும் விளங்குகின்றது. மேலும் விலங்கு, தாவரம் முதலியவற்றுக்கும் உணவு வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மண்ணினை அதிலுள்ள மணல், களி என்பவற்றின் தன்மை நோக்கி மணல் மண், களிமண், நன்மண் என வகுப்பார்கள். மணல் மண் கடற்கரைப் பகுதிகளிலும் ஆற்றங்கரைகளிலும் காணப்படுகின்றது. களிமண் சதுப்பு நிலங்களிலும் குளங்களிலும் காணப்படுகின்றது. நன்மண்ணில் பதமண், இருவாட்டிமண் முதலிய பிரிவுகள் உண்டு. நன்மண் தோட்டச் செய்கைக்கும் நெற்செய்கைக்கும் உதவுகின்றது.

நிலத்தினுள் பெறுமதி வாய்ந்த கனிப்பொருள்கள் உண்டு. அவற்றுட் சில மேற்பரப்பிலும் சில நிலத்தின் அடியிலும் இருந்து கிடைக்கின்றன.

எமது நாட்டுக் கனிப் பொருள் வகைகளில் காரீயம், கனிய மணல், சுண்ணும்புக் கல் முதலியன விசேடமாகக் குறிப்பிடக் கூடியன. இரத்தினக் கல் இரும்புத் தாது, நிலக்கரி வகைகளும் கனியப் பொருள்களே! கடல் நீரைப் பாத்திகளில் கட்டி உப்பு விளைவிக்கப் படுகின்றது.

மரஞ் செடி கொடி வகைகளும் நமது பிரதேசத்து வளங்களே! அவற்றால் நாம் மிகவும் பயன் அடைகின்றோம்.

இலங்கையின் கனிப்பொருள்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி

I. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. இயற்கைப் பொருள் ஒன்று :
   [ நீர் / வீடு / வண்டி ]

2. செயற்கைப் பொருள் ஒன்று :
   [ வளி / மண் / கட்டில் ]

3. அடிப்படைத் தேவைகளில் ஒன்று :
   [ அணிகலம் / பிரயாணம் / உணவு ]

4. அழுக்கு நீரினால் உண்டாகும் ஒரு நோய் :
   [ காய்ச்சல் / வயிற்றுளைவு / வீக்கம் ]

5. எமது நாட்டுக் கனிப்பொருள் ஒன்று :
   [ வாழைப்பழம் / காரீயம் / மாம்பழம் ]

6. மணல் மண் கிடைக்கும் ஓரிடம் :
   [ சதுப்புநிலம் / ஆற்றங்கரை / குளக்கரை ]

II. பின்வரும் சொற்களுடன் கூட்டில் உள்ள சொற்கள் ஏதோ ஒரு வகையில் தொடர்புடையன; மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

| | | |
|---|---|---|
| நீர் | ........................................ | பாகல் |
| கனியம் | ........................................ | இல்மனைற் |
| கொடி | ........................................ | காகம் |
| வளி | ........................................ | இருவாட்டி மண் |
| விலங்கு | ........................................ | உப்பு |
| தோட்டம் | ........................................ | அசைதல் |
| கடல் நீர் | ........................................ | குளம் |

III. வரைந்து காட்டுக.

கிராமத்தின் / நகரத்தின் படத்தை வரைந்து கிடைக்கக் கூடிய வளங்களை உரிய இடங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிற்பாடு

1. உங்கள் சுற்றுடலில் காணப்படும் வான் பயிர்களையும் ( தாமாக முளைத்தவை ) செய் பயிர்களையும் ( மனிதர்களால் நாட்டப்பட்டவை ) வேறுபடுத்தி எழுதுக.

| வான்பயிர் | செய்பயிர் |
|---|---|
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |

2. சூழலில் கிடைக்கும் பூண்டு வகைகளின் பெயர்களையும் எழுதி அவற்றின் உபயோகத்தையும் குறிக்க.

| | பூண்டுவகை | உபயோகம் |
|---|---|---|
| 1 | *தயிர்வேளை* | *மருந்துக்கு* |
| 2 | ........................................ | ........................................ |
| 3 | ........................................ | ........................................ |
| 4 | ........................................ | ........................................ |
| 5 | ........................................ | ........................................ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. கிராமத்தின்/நகரத்தின் மக்களும் மனித செயற்பாடும்

[ பாடப்பொழிப்பு ]

ஒரு குடும்பத்தில் தந்தை, தாய், பிள்ளைகள், மற்றும் உதவியாளர் முதலிய பல உறுப்பினர் இருக்கின்றார்கள் என்று படித்திருக்கின்றோம். குடும்பங்கள் பல சேர்ந்து ஒரு கிராமம் உருவாகின்றது. கிராமம் வளர்ச்சியடைந்து நகரம் உருவாகின்றது. நகரங்களில் வேலை வாய்ப்பும் பிறவசதிகளும் இருப்பதனால் மக்கள் அங்கு அதிக அளவில் சென்று குடியேறுகின்றார்கள்.

ஒரு குடும்ப அங்கத்தவர்களிடையே வயது, உயரம், நிறம், திறமை, பழக்க வழக்கம் முதலியவற்றில் வேறுபாடுகள் காணப்படுவதை அறிவீர்கள். இவ்வாறே கிராமம் நகரம் முதலியவற்றிலும் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களிடையேயும் நிறைய வேறுபாடுகள் காணப்படலாம். அவர்கள் மொழியால், மதத்தால் தொழிலால் வேறுபட்டிருக்கலாம்.

ஒரு கிராமத்தில் உள்ளவர்கள் எல்லோருமே தமிழையோ சிங்களத்தையோ பேசுபவர்களாய் இருக்கலாம், வேறுவேறு மொழி பேசுபவர்களும் இருக்கலாம். சைவம், கிறீத்தவம், இஸ்லாம் முதலிய மதங்களைச் சேர்ந்தவர்கள் காணப்படலாம்.

கமத்தொழில், கைத்தொழில், கடற்றொழில், தச்சுத் தொழில், வணைதற்றொழில் முதலிய பல்வேறு தொழில்கள் மூலம் வாழ்க்கை நடத்துபவர்களாகவும் இருக்கலாம்.

## 8 : 1 கமத்தொழில்

[ பாடப் பொழிப்பு ]

உங்கள் கிராமம் / நகரம் ஒரு கமத்தொழிற் பிரதேசமாக இருக்கலாம், உணவுப் பொருள்கள் கமத்தொழிலின் மூலமே கிடைக்கின்றன. நெல், காய்கறி, கிழங்கு, பழம் முதலியன நுகர்வுச்சாகவே பயிரிடப்படுகின்றன. இவற்றைச் சிவனோபாயப் பயிர்கள் என்று கூறுவர்.


உங்கள் கிராமத்தில் தென்னை பயிரிடப்பட்டிருக்கலாம். அல்லது தேயிலை இறப்பர் முதலியன பயிரிடப்பட்டிருக்கலாம், இவற்றை வர்த்தகப்பயிர்கள் என்று கூறுவர்.

கமத்தொழில் இன்று மிகவும் விருத்தி அடைந்துள்ளது. அதிக விளைச்சல் தரும் விதைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. நிலத்தைப் பண்படுத்தும் முறையிலும் பாரிய மாற்றங்கள் உண்டாயிருக்கின்றன. எந்திரக்கலப்பைகள் பயன்படுத்தப்படுகின்றன. பயிர்களுக்குண்டாகும் நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

... வந்துள்ளன. அதிக விளைச்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8 · 2 கைத்தொழில்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[ பாடப் பொழிப்பு ]

ஏதாவது ஒரு மூலப்பொருளைக் கொண்டு, கருவிகளின் உதவியுடன் யாதானும் ஒரு பொருளை ஆக்கும் முயற்சியைக் கைத்தொழில் என்று கூறுகின்றனர்கள். முன்பெல்லாம் தொழில்கள் குடிசைகளிலே நடந்தன. எமது அன்றாட தேவைகளுக்குரிய கத்தி, அரிவாள், துருவுமணை முதலியவற்றைக் கம்மாலையில் செய்து தந்தார்கள். கட்டில், வாங்கு, முதலியவற்றைத் தச்சுத் தொழிலாளர் செய்து தந்தனர். பாய், கடகம், பெட்டி முதலியவற்றைப் பன்னவேலைக்காரர் அளித்தனர். மட்கலம் மற்றும் பாத்திரங்களை வனைதல் தொழிலாளி செய்து தந்தார்.

மனித உழைப்பை அதிக அளவில் பயன்படுத்தும் சிறிய அளவிலான தொழில் குடிசைக் கைத்தொழில் என்று அழைக்கப்பட்டது.

உங்கள் கிராமத்தில் பன்னவேலை, வனைதல் தொழில், தச்சுவேலை, கம்மாலைத் தொழில், கைத்தறி நெசவு முதலிய குடிசைக் கைத்தொழில்களுள் ஒன்றோ பலவோ காணப்படலாம்.

தேவைகள் அதிகரித்தன; குறைந்த நேரத்தில் கூடிய அளவு பொருள்களை உற்பத்தி செய்யவேண்டி இருந்தது. எந்திர சாதனங்களும் கருவிகளும் தோன்றின. மின்சக்தியும் உபயோகத்துக்கு வந்தது. குடிசைக் கைத்தொழில்கள் வளர்ச்சி அடைந்து எந்திரத்தொழிலாக மாற்றம் அடைந்தன. சில நகரங்களில் எந்திரத் தொழில்கள் நல்ல வளர்ச்சி அடைந்துள்ளன. அங்கு கனரகக்கைத் தொழில்கள் உருவாகி உள்ளன.

## 8 - 3 கிராமத்துக்கு / நகரத்துக்குக் கிடைக்கும் சேவைகள்

[ பாடப் பொழிப்பு ]

தனியொருவருக்கு உணவு, உடை, சுகாதாரம், பொழுதுபோக்கு, தகவல் தொடர்பு, போக்குவரத்து வசதி முதலிய பல்வேறு தேவைகள் இருப்பதனை அறிவீர்கள். கிராம மட்டத்திலும், நகர மட்டத்திலும் வாழும் மக்களுக்கும் பல்வேறு தேவைகள் இருக்கின்றன.


கிராமத்தவர் / நகரத்தவர் வேண்டிய வேண்டிய போதெல்லாம் உணவுப் பண்டங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட வியாபாரிகள் உணவுப் பண்டங்களை விற்பனை செய்கிறார்கள். ஐக்கிய பண்டசாலைகளும், மக்கள் கடைகளும் விற்பனை செய்கின்றன.

சுற்றாடல் சுத்தம், தொற்று நோய்த் தடுப்பு, மலசலகூடசேவை, சத்துணவு பேணல் போன்ற சேவைகளை உள்ளூராட்சி அமைப்புக்கள் உதவுகின்றன.

வைத்திய சேவையினைத் தனிப்பட்ட மருத்துவர்கள் இயற்றுகின்றார்கள். அல்லாமலும் அரசாங்க, தனியார், மருத்துவமனைகளும், வைத்தியசாலைகளும் சேவையாற்றுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனம் முதலிய அமைப்புகள் வானொலி, தொலைக்காட்சிச் சேவைகளை நடத்தி வருவதை அறிவீர்கள். தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்குக் கடிதம், தந்தி, தொலைபேசி முதலியன உதவுகின்றன. இச்சேவைகளை அஞ்சல் திணைக்களத்தின் மூலம் அரசு நடத்தி வருகின்றது.




வசுவண்டி, மினிவசு முதலியவற்றின் மூலம் ஓரிடத்தில் இருந்து மற்றுமோர் இடத்திற்குச் சென்று வருகின்றோம். தொலைவு இடங்களுக்குப் புகைவண்டி மூலம் சென்று வருகின்றோம். இவ்வகையில், இலங்கைப் போக்குவரத்துச் சபை, தனியார் போக்குவரத்துச் சங்கம், புகைவண்டித் திணைக்களம் முதலியன உதவுகின்றன.

நீர்வழங்குதல், மின்சக்தி வழங்குதல், பாதுகாப்பு முதலியவற்றை அரசு வழங்கி வருகின்றது.

கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலையம் முதலிய பொது நிறுவனங்கள் கிராமப் புறங்களில் சிரமதான அடிப்படையில் செய்து வரும் தொண்டுகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

குடும்பத்தின் முன்னேற்றம் வளர்ச்சி முதலியன உறுப்பினர்களின் ஒற்றுமை ஒத்துழைப்பு முதலியவற்றில் தங்கி இருக்கின்றன. அதனைப் போல, கிராமத்தின் / நகரத்தின் முன்னேற்றம் வளர்ச்சி முதலியன ஆங்கு வாழும் மக்களின் ஒற்றுமையிலும் ஒத்துழைப்பிலும் தங்கி இருக்கின்றன.

திருமணம், மரணச்சடங்கு மற்றும் பொதுவைபவங்கள் கிராமத்தில் அல்லது நகரத்தில் நடைபெறும் போது மக்கள் ஒற்றுமையாக ஒத்துழைத்து குறித்த நிகழ்ச்சிகளை செவ்வனே நடத்துவதைக் காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி

I. கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான சொல்லை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்க.

1. ஒரு குடும்பத்தைச் சேர்ந்த தந்தை தாய் பிள்ளைகள் முதலியோர் .................................................... என அழைக்கப்படுவர்.
   ( உறவினர் / குடும்பத்தார் / உறுப்பினர் / ஊரவர் )

2. தமிழ் மக்களில் பெரும்பாலானவர் ..................................................... சமயத்தைச் சேர்ந்தவர்.
   ( கிறீத்து / சைவ / இஸ்லாம் / பௌத்த )

3. நிலத்தை உழுது பயிர்களை உண்டாக்கும் தொழிலை ............................................... என்று கூறுவர்.
   ( கடற்றொழில் / கைத்தொழில் / கமத்தொழில் / தச்சுத்தொழில் )

4. ஒரு கிராமத்தின் முன்னேற்றம் அக்கிராமத்து மக்களின் ............................................ ஒத்துழைப்பிலும் தங்கி இருக்கின்றது.
   ( சுறுசுறுப்பு / விடாமுயற்சி / ஒற்றுமை / கல்வியறிவு )

5. மூலப் பொருள் ஒன்றைக் கொண்டு கருவியின் உதவியோடு ஒரு பொருளை ஆக்கும் முயற்சி ........................................... என்று கூறப்படும்.
   ( கடைதற்றொழில் / கடற்றொழில் / கைத்தொழில் / வனைதற்றொழில் )

6. ........................................... அதிகரிப்பு எந்திரத்தொழில் வளர்ச்சியை ஊக்குவித்தது.
   ( பொருளாதார / நாகரிக / தேவைகள் / சனத்தொகை )

II. சுருக்கமான விடை தருக.

1. மக்கள் நகரங்களில் குடியேறுவதற்குரிய காரணங்களில் ஒன்று கூறுக.
   ..........................................................................................................

2. உமது கிராமத்தில் என்ன என்ன மொழிகள் பேசுவோர் வாழ்கின்றனர்?
   ..........................................................................................................

3. வனைதற்றொழிலுக்குப் பயன்படும் மூலப் பொருள் எது?
   ..........................................................................................................

4. சீவனோபாயப் பயிர்கள் இரண்டு தருக.
   ..........................................................................................................

5. வர்த்தகப் பயிர்கள் இரண்டு தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..........................................................................................................

6. உமக்குத் தெரிந்த செயற்கை உரம் ஒன்றின் பெயர் தருக.

..................................................................................................................................

7. உமது வீட்டில் பயன்படுத்தப்படும் இரும்பாலான இரு கருவிகள் கூறுக;

..................................................................................................................................

8. மின் சக்தியால் இயங்கும் எந்திரம் இரண்டு தருக.

..................................................................................................................................

9. தொற்று நோய்த் தடுப்புச் சேவையை இயற்றிவரும் நிறுவனம் எது?

..................................................................................................................................

10. உணவுப் பண்டங்களை எமக்கு வழங்கும் சேவை செய்பவர்களை எப்படி அழைக்கின்றோம்?

..................................................................................................................................

III. வரைந்து காட்டுக;

திருமண விழா

## தொழிற்பாடு

1. உங்கள் கிராமத்தில் உள்ள மக்கள் பற்றிய பின்வரும் மதிப்பீட்டை நிறைவு செய்க.

| | தமிழர் | முஸ்லிம்கள் | சிங்களவர் | பறங்கியர் |
|---|---|---|---|---|
| தொகை | .................. | .................. | .................. | .................. |

II. உங்கள் கிராமத்து மக்கள் பற்றிய பின்வரும் மதிப்பீட்டை நிறைவு செய்க.

| | இந்துக்கள் | முஸ்லிம்கள் | கிறீத்தவர் | பௌத்தர் |
|---|---|---|---|---|
| தொகை | .................. | .................. | .................. | .................. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. கிராமத்தில் நடைபெற்ற புத்தாண்டு விழாவின் போது அவர்களிடம் காணப்படும் நடைமுறைகள் பழக்க வழக்கங்கள்.

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

IV. உமது கிராமத்தில் விளைவிக்கப்படும் பயிர்வகைகளை அட்டவணைப்படுத்தி எழுதுக;

| ஜீவனோபாயப் பயிர்கள் | விற்பனைப் பயிர்கள் |
|---|---|
| ............................................ | ............................................ |
| ............................................ | ............................................ |
| ............................................ | ............................................ |
| ............................................ | ............................................ |
| ............................................ | ............................................ |

V. உங்கள் கிராமம் / நகரத்துக்குச் சேவைகள் வழங்கும் நிறுவனங்களையும் சேவைகளையும் அட்டவணைப் படுத்தி எழுதுக.

| நிறுவனங்கள் | சேவைகள் |
|---|---|
| ............................................ | ............................................ |
| ............................................ | ............................................ |
| ............................................ | ............................................ |
| ............................................ | ............................................ |
| ............................................ | ............................................ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. கிராமத்தின்/நகரத்தின் வரலாறு

[ பாடப் பொழிப்பு ]

உங்கள் பாடசாலைக்கு ஒரு வரலாறு உண்டு. அந்த வரலாற்றை எழுதுவதற்குப் பல்வேறு ஆதாரங்களைப் பயன்படுத்தினீர்கள்;

கிராமத்தின் அல்லது நகரத்தின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கோ எழுதிக் கொள்வதற்கோ நாம் பல ஆதாரங்களைத் தேடிக் கொள்ளவேண்டும்.

கிராமத்தின் / நகரத்தின் பெயர்க் காரணம் விளக்கப்பட வேண்டும். அதற்கு மக்களிடையே வழங்கி வரும் நாட்டார் கதைகள் பயன்படக் கூடும்.

கிராமத்தில் உள்ள புராதன கட்டடங்களின் சிதைபாடுகளும், புராதன கட்டடங்களும் நினைவுச் சின்னங்களும் பல உண்மைகளை வெளியிடக்கூடும்.

கிராமத்தில் / நகரத்தில் வாழ்ந்த புலவர்களின் நூல்கள் எங்களுக்கும் பல வரலாற்றுச் செய்திகளைக் கூறக்கூடும்.

நினைவுச் சின்னங்கள், கல்வெட்டுக்கள், பதிவேடுகள், தோம்புகள் முதலியனவும் உங்களுக்குப் பயன்படலாம்,

அவற்றின் உதவியுடன் கிராமத்தின் / நகரத்தின் வரலாற்றைத் தொகுத்துக் கொள்ளலாம்.

இக்காலத்தில் கிராமங்களும் நகரங்களும் நவீன வசதிகளுடன் கூடிய வீடு, பாடசாலை, மருத்துவ நிலையம், அஞ்சல் நிலையம், சந்தை, விளையாட்டிடம், திரையரங்கு முதலியவற்றுடன் போக்குவரத்து வசதி முதலியவற்றை உடையனவாய் விளங்குகின்றன.

## பயிற்சி

I. சரி பிழை கூறுக.

1. ஒவ்வொரு கிராமத்துக்கும் வரலாறு உண்டு. [..........]
2. சமயசம்பந்தமான கட்டடங்கள் வரலாற்றுச் சான்றுகளாக அமைவதில்லை; [..........]
3. அழகுக்காகவே கல்வெட்டுக்களை நிறுவுகின்றார்கள்; [..........]
4. நாட்டார் கதைகளில் வரலாற்று உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன. [..........]
5. கிராமப் புறத்து வீடுகளில் நவீன வசதிகள் மிகமிகக் குறைவு. [..........]

II. சுருக்கமான விடை தருக.

1. கிராமம் / நகரம் அமைவதற்குரிய காரணி ஒன்று கூறுக.

..........................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. உங்கள் கிராமத்தில் / நகரத்தில் உள்ள பழைய கட்டடம் ஒன்றின் பெயர் தருக.

..........................................................................................................................................

3. தோம்பு என்று எதனைக் கூறுகின்றோம்?

..........................................................................................................................................

4. உங்களூரில் முற்காலத்தில் வாழ்ந்த புலவர் ஒருவரின் பெயரைத் தருக.

..........................................................................................................................................

5. உமது கிராமத்தின் / நகரத்தின் பெயர்க் காரணம் தருக.

..........................................................................................................................................

6. மாவிட்டபுரம் என்ற பெயர் எப்படி உண்டானது?

..........................................................................................................................................

III. வரைந்து காட்டுக.

எனது கிராமம்

## தொழிற்பாடு :

1. அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| உங்கள் பகுதியில் உள்ள புராதன கட்டடப் பெயர் | அதன் காலம் |
|---|---|
| .......................................................... | .......................... |
| .......................................................... | .......................... |
| .......................................................... | .......................... |
| .......................................................... | .......................... |
| .......................................................... | .......................... |

## அலகு 3

# நம் நாடு

## 10. கிராமிய / நகர நிருவாகம்

நமது நாடு இலங்கை. இது இந்தியத் துணைக் கண்டத்திற்குத் தெற்கே இந்து சமுத்திரத்தின் நடுவில் அமைந்திருக்கின்றது. பாக்கு நீரிணையினால் இந்தியாவினின்றும் பிரிக்கப்பட்டுள்ளது. 'இந்து சமுத்திரத்தின் முத்து' என்று இதனைப் புகழ்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்வளம், நிலவளம், கடல்வளம் செறிந்த இந்நாடு ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்பது மாகாணங்களும் இருபத்தைந்து மாவட்டங்களாகவும், மாவட்டங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் 175 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உண்டு. மேலும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் கிராம சேவை அலுவலர் பிரிவுகளாக வகுத்துள்ளனர். கிராம சேவையாளர் பிரிவு 4000 க்கும் அதிகமாகும்.

நாட்டின் நிருவாகத் தலைவராக நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி இருக்கின்றார். அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். சனாதிபதியின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்து கொள்ளப்பட்ட தலைமை அமைச்சரும் ஏனைய அமைச்சர்களும் செயலாற்றுகின்றனர். இவர்களுடன் தொடர்புடைய அமைப்பு மத்திய அரசு எனப்படுகின்றது. மேலும் மாநகர, நகர, பிரதேச சபைகளும் உண்டு. அவை, உள்ளூராட்சி அமைப்பு என்று கூறப்படுகின்றன.

மத்திய அரசு, பொதுவாக அனைத்து மக்களையும் பாதிக்கும் தேசியப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் பணியிலும், நாட்டின் அபிவிருத்திப் பணியிலும் கவனஞ் செலுத்தி உழைத்து வருகின்றது.

உள்ளூராட்சி அமைப்புக்கள் தத்தம் பகுதிகளுக்குரிய பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்க்கும் பணியிலும், மக்களுக்கு வழங்கிவரும் சேவைகளைச் சீராக நடத்தும் பணியிலும், அக்கறை கொண்டு கருமமாற்றி வருகின்றது.

உள்ளூராட்சி அமைப்புக்கள் தத்தம் கிராமத்துக்கோ நகரத்துக்கோ தேவையான சேவைகளை மட்டும் இயற்றிவர, மத்திய அரசு நாடு முழுவதற்கும் உரிய சேவைகளை இயற்றி வருகின்றது.

## 10 : 1 சட்டதிட்டங்கள்

பாடசாலைச் சட்டதிட்டங்கள் பாடசாலை சீராக இயங்கவும், ஆசிரியர்களதும் மாணவர்களதும் உரிமைகளும் கடமைகளும் பேணப்படவும் உதவுகின்றன எனவும் அறிந்திருக்கின்றீர்கள். அவ்வாறே நாட்டின் சட்டதிட்டங்கள் கிராமத்தின் அல்லது நகரத்தின் நிருவாகம் சீராக இயங்கவும், மக்களது உரிமைகளும் கடமைகளும் பேணப்படவும் உதவுகின்றன.

மத்திய அரசு, முழுநாட்டிற்குமான சட்டதிட்டங்களைப் பாராளுமன்றத்தின் மூலம் இயற்றி நடைமுறைப்படுத்தி வருகின்றது. உள்ளூராட்சி அமைப்பு ஒவ்வொன்றும், தத்தமது ஆதிக்கத்துக்குட்பட்ட பிரதேசத்துக்கு வேண்டிய சட்டதிட்டங்களைத் தாமே இயற்றிச் செயற்படுத்துகின்றன. உள்ளூராட்சி அமைப்பு இயற்றும் சட்டதிட்டம் பெரும்பாலும் அவ்வமைப்பு அமைந்துள்ள பிரதேசத்தின் சேவைகளுக்குரிய நிதியுடன் தொடர்புபட்டனவாய் இருக்கும்.

மத்திய அரசு கல்வி, மருத்துவம், அஞ்சற் சேவை ...
போன்ற ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களங்கள் மூலம் செயற்படுத்தப் படுகின்றன. அவ்வாறே உள்ளூராட்சி அமைப்புகளும் தத்தமது பகுதிகளுக்கு வெளிச்சம், நீர் விநியோகம், சுற்றாடற் சுத்தம், மலசலகூடப் பராமரிப்புப் போன்ற சேவைகளை வழங்கி வருகின்றன.

ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் சட்டதிட்டங்களை பின்பற்றி நடத்தல் தலையாய கடமையாகும்.

## 10 - 2 கடமைகளும் உரிமைகளும்

கிராமத்தில் அல்லது நகரத்தில் வாழ்ந்து வரும் ஒவ்வொரு குடியிருப்பாளர்களுக்கும் பல பல உரிமைகள் உண்டு. உங்கள் வாழ்க்கை முறைகளை உங்கள் விருப்பின்படி அமைத்துக் கொள்ளலாம். உணவு விடயத்தில் தாவர உணவுகளை மட்டும் உட்கொள்ளலாம். மாமிச உணவுகளை மட்டும் உட்கொள்ளலாம். இரண்டினையும் கலந்தும் உண்ணலாம். விருப்பிய விழாக்களை நடத்தலாம். விரும்பிய சமயானுட்டானங்களைப் பின்பற்றலாம். விழாக்களை நடத்தலாம். அதே வேளையில் உங்கள் செயல்கள் பிறருக்குத் தீங்கு விளைவிக்காதனவாக அமையுமாறு பார்த்துக்கொள்ள வேண்டிய கடமையும் உண்டு. உரிமைகளை நீங்கள் விரும்பும் அளவுக்கு உங்கள் கடமைகளையும் சரியாகச் செய்து வருதல் வேண்டும்.

கிராமங்களில் / நகரங்களில் குப்பை போடாதீர்கள், மலங்கழிக்கும் இடமென்றெல்லாம் சில இடங்களில் எழுதப்பட்டிருப்பதனை வாசித்திருப்பீர்கள். ஏன் அவ்வாறு விளம்பரம் போட்டிருக்கின்றார்கள். சுற்றுடலை அசுத்தம் செய்யாதிருத்தல் உங்கள் கடமை என்பதை அறிவிப்பதற்காக, வீடுகளை அமைக்கும் உரிமை குடியிருப்பாளர்களுக்கு உண்டு. எனினும் தூயகாற்று, சூரியஒளி, நன்னீர் வசதி என்பன உடையதாக அமைத்துக்கொள்ள வேண்டியது எங்கள் கடமையாகும்.

### பயிற்சி

I. பின்வரும் தொடர்களுக்குப் பொருத்தமான பகுதிகளைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் பொருத்தி எழுதுக.

| | |
|---|---|
| 1. இலங்கை இந்தியத் துணைக்கண்டத்துக்கு தெற்கில் .................................................. | (i) மத்திய அரசு கவனம் செலுத்தி வருகின்றது. |
| 2. அனைத்து மக்களையும் பாதிக்கும் தேசிய பிரச்சினைகளில் .................................................. | (ii) கடமைகளையும் சரியாகச் செய்தல் வேண்டும். |
| 3. ஒருவர் உரிமைகளை விரும்பும் அளவுக்கு .................................................. | (iii) தூயகாற்று, சூரியஒளி, நன்னீர் வசதி என்பனவாம். |
| 4. நாம் வாழும் வீட்டுக்கு இன்றியமையாத வசதிகள் .................................................. | (iv) இந்து சமுத்திரத்தின் நடுவில் அமைந்துள்ளது. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II. சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.

1. இலங்கை அமைந்திருப்பது:
   1. பசுபிக்சமுத்திரத்தில் 2. அத்திலாந்திக் சமுத்திரத்தில்
   3. இந்து சமுத்திரத்தில் 4. ஆட்டிக் சமுத்திரத்தில்

2. இரண்டு கடல்களைச் சேர்க்கும் குறுகிய நீர்ப் பகுதி:
   1. சலசந்தி 2. குடா 3. துறைமுகம் 4. முனை

3. இலங்கையில் உள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை:
   1. 09 2. 25 3. 24 4. 07

4. உள்ளூராட்சி அமைப்பின் கீழ் அடங்காத நிறுவனம்:
   1. மாநகரசபை 2. நகரசபை 3. பிரதேசசபை 4. பாராளுமன்றம்

5. முழு நாட்டிற்குமென சட்ட திட்டங்களை இயற்றும் பணியைச் செய்வது:
   1. மந்திரிசபை 2. பிரதேசசபை 3. மாவட்டசபை 4. பாராளுமன்றம்

II. சரி, பிழை கூறுக.

1. இலங்கை ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. [..........]
2. பிரதேச சபைகளின் கீழ்க் கிராம சேவை அலுவலர்கள் கடமையாற்றுகின்றனர். [..........]
3. மத்திய அரசு நாடு முழுவதற்கும் உரிய சேவைகளை இயற்றிவருகின்றது. [..........]
4. உள்ளூராட்சி அமைப்புக்கள் தத்தம் பகுதிகளுக்குட்பட்ட இடங்களுக்குரிய சட்ட திட்டங்களை இயற்றுகின்றன. [..........]
5. ஒருவர் உரிமைகளை விரும்பும் அளவுக்குக் கடமைகளையும் செய்தல்வேண்டும். [..........]

## தொழிற்பாடு

I. கீழே உள்ள அட்டவணையை நிரப்புக.

| | |
|---|---|
| எனது கிராமத்தின் / நகரத்தின் பெயர் | .............................................. |
| இங்குள்ள உள்ளூராட்சி மன்றம் | .............................................. |
| அதன் தலைவர் | .............................................. |
| எமது பகுதி உள்ளூராட்சி அமைப்புக்கான உறுப்பினர் | .............................................. |
| எமது தேர்தல் தொகுதியின் பெயர் | .............................................. |
| உறுப்பினர் பெயர் | .............................................. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II. குடியிருப்பாளர்களின் கடமைகளும் உரிமைகளும்

| கடமைகள் சில | உரிமைகள் சில |
|---|---|
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |

III. வரைந்து காட்டுக.

இந்தியத் துணைக் கண்டத்துடன் இலங்கை அமைந்திருக்கும் விதத்தைக் காட்டும் படத்தை வரைதல்.

# 11. தேசிய கீதம், தேசியக் கொடி, தேசிய இலச்சினை.

[ பாடப் பொழிப்பு ]

ஒவ்வொரு நாட்டிற்கும் தேசிய கீதம், தேசியக் கொடி, தேசிய இலச்சினை என்பன உண்டு. இவை நாட்டின் குறிக்கோளையும், பண்புகளையும் எடுத்துக் காட்டுவனவாய் அமையும். இவை மிகவும் மகத்துவம் வாய்ந்தன; புனிதமானவை. இவற்றைப் பேணிக்காப்பது நாட்டு மக்களின் தலையாய கடமையாகும்.

## 11.1 தேசிய கீதம்

[ பாடப் பொழிப்பு ]

"சிறீலங்கா தாயே — நம் சிறீலங்கா
நமோ நமோ நமோ தாயே
நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணிலங்கா"

.................................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் இலங்கைத் தேசிய கீதம் அரசுடன் தொடர்புபட்ட விழாக்கள், கூட்டங்கள் முதலியவற்றில் இசைக்கப்படுவதைக் கேட்டிருப்பீர்கள்.

இதனைச் சிங்கள மொழியில் ஆனந்த சமரக்கோன் என்பவர் இயற்றினர். முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்கள் தமிழாக்கம் செய்துதவினர்.

1948 பெப்ரவரி 4 ஆம் நாள் நடைபெற்ற முதலாவது சுதந்திரதின விழாவின் போது முதன்முதலாக மேற்படி தேசிய கீதம் இசைக்கப்பட்டது, அன்று முதல் நடைமுறையில் இருந்து வருகின்றது.

தேசிய கீதம், நாட்டுப்பற்றையும் அபிமானத்தையும் வளர்க்கும் கருவியாக அமைந்துள்ளது. தேசிய கீதம் இசைக்கப்படும் போது எல்லோரும் இருக்கையை விட்டு எழுந்து மதிப்பளித்தல் வேண்டும். தேசிய கீதத்தை இழிவு செய்தல் நாட்டு மக்களை இழிவு செய்வது போல அமையும்.

## 11 - 2 தேசியக் கொடி

[ பாடப் பொழிப்பு ]

எமது நாட்டுத் தேசியக் கொடியைப் பாருங்கள். அது மூன்று பிரிவுகளைக் கொண்டிருக்கின்றது. முதற்பிரிவு சற்றுப்பெரியது. அதில் சிவப்புநிறப் பின்னணியில் வாளேந்திய சிங்கம் ஒன்று நிற்கின்றது. அப்பகுதி பெரும்பான்மையினரான சிங்களவரைக் குறிக்கின்றது. அப்பிரிவின் நான்கு மூலைகளிலும் வெள்ளரசிலை தெரிகின்றது. அதன் மூலம் பௌத்த சமயம் குறிக்கப்படுகின்றது.

செம்மஞ்சள் நிறம் கொண்ட பகுதி தமிழ் இனத்தைக் குறிக்கின்றது. பச்சை நிறம்கொண்ட பகுதி முஸ்லிம் சமூகத்தைக் குறிக்கின்றது.

தேசியக் கொடியானது, சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய வேறு இனத்தவர்களும் நாம் இலங்கையர் என்ற அடிப்படையில் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்னும் பேருண்மையை வெளியிடுகின்றது.

இன்று நாம் உபயோகிக்கும் தேசியக் கொடியானது கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரமராசசிங்கனின் கொடியை அடிப்படையாகக் கொண்டதாகும். இலங்கைத் தேசியக் கொடியை எஸ். டபிள்யூ. ஆர் டி. பண்டார நாயக்கா, ஜீ . ஜீ. பொன்னம்பலம், ரீ . பீ . ஜயாயா ஜனாதிபதி, ஜே . ஆர் . ஜயவர்த்தன முதலியோரை உள்ளடக்கிய விசேட குழுவினரால் உருவாக்கப்பட்டது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களின் போதும், ஏனைய சிறப்பு வைபவங்களின் போதும் கொடி ஏற்றப்படும். கொடியேற்றத்துடன் விழாக்கள் தொடங்கும்.

வெளிநாட்டுத் தலைவர்கள் கலந்துகொள்ளும் மாநாடுகளிலும், வரவேற்பு வைபவங்களிலும் வெளிநாட்டுக் கொடிகளுடன் நமது கொடி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுத் தலைவர்களின் இழப்பின்போதும் நாடு தழுவிய துக்க நிகழ்வுகளின் போதும் தேசியக்கொடி அரைத்தம்பத்தில் பறக்க விடப்படும். கொடி ஏற்று வைபவத்தின்போது எல்லோரும் எழுந்து நின்று மதிப்பளித்தல் வேண்டும்.

## 11 : 3 அரச இலச்சினை

[ பாடப் பொழிப்பு ]



உங்கள் பாடசாலைக்கென ஒரு இலச்சினை இருப்பது போல இலங்கை அரசும் ஒரு இலச்சினையை வைத்திருக்கின்றது. இலச்சினை - முத்திரை. இலங்கை சுதந்திரம் அடைந்த போது புதிய அரச இலச்சினை ஒன்று உருவாக்கப்பட்டது. அது முடியுடன் கூடியது.

இலங்கை குடியரசானதில் இருந்து மற்றொரு இலச்சினை உருவாக்கப்பட்டது. இலச்சினையின் நடுவே வாளேந்திய சிங்கம் நிற்கின்றது. மேற்பகுதியில் தரும சக்கரம் பொறிக்கப்பட்டுள்ளது. அடியில் சூரிய சந்திரர்களது உருவம் உண்டு மற்றும் பூரண கும்பமும் உண்டு. மேலும் தாமரை இதழ் அலங்காரத்தில் தானியக் கதிர்கள் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அரசாங்க ஆவணங்களில் இவ் விலச்சினை பொறிக்கப்படுவது வழக்கம்.

### பயிற்சி

1. கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான சொற்றொடரை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்க:

   1. ஒரு நாட்டினர் அந்நாட்டு ........................................ மதிப்பு அளித்தல் வேண்டும்.
      [ சரித்திரத்தடயத்துக்கு / பொதுச்சொத்துக்கு / தேசியக்கொடிக்கு / வழிபாட்டிடத்துக்கு ]

   2. இலங்கை ........................................ ஆம் ஆண்டில் சுதந்திரம் அடைந்தது.
      [ 1960 / 1972 / 1948 / 1980 ]

   3. தேசிய கீதம் இசைக்கப்படும்போது எல்லோரும் ........................................ நன்று.
      [ அமர்ந்திருத்தல் / எழுந்து நிற்றல் / வெளிநடப்புச் செய்தல் / கண்ணை மூடிக்கொள்ளல் ]

   4. எமது நாட்டுத் தேசியக் கொடியில் சிவப்புநிறப் பின்னணியில் வாளேந்திய சிங்கம் நிற்கும் பகுதி ........................................ இனத்தைக் குறிக்கும்.
      [ தமிழ் / முஸ்லிம் / சிங்கள / பறங்கி ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தேசியக் கொடியை ................................ அரைத் தம்பத்தில் தொங்க விடுவர்.
( தலைவரின் இழப்பின்போது / விசேட விழாவின்போது / வரவேற்பு வைபவத்தின்போது / படை எடுப்பின்போது )

6. அரச இலச்சினையை .......................................... ஆவணங்களில் குறிப்பிடுதல் வழக்கம்.
( வெளியூர்க் கடிதங்களில் / அரச ஆவணங்களில் / தபால் தலைப்புகளில் / கூட்டஅழைப்புகளில் )

II. சுருக்கமான விடை தருக.

1. சிங்கள மொழியில் அமைந்த இலங்கைத் தேசிய கீதத்தை யார் ஆக்கியுதவினார் ?

..........................................................................................................

2. இலங்கைத் தேசியக் கொடியில் செம்மஞ்சள் நிறம் கொண்ட பகுதி எந்த இனத்தைக் குறிக்கின்றது ?

..........................................................................................................

3. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விழா கூறுக.

..........................................................................................................

4. எப்போது இலங்கை குடியரசு ஆக்கப்பட்டது ?

..........................................................................................................

5. இலங்கைப் பாராளுமன்றத்தின் தலைவர் எவ்வாறு அழைக்கப்படுகின்றார் ?

..........................................................................................................

## தொழிற்பாடு

1. உங்கள் கிராமத்தில் நடைபெற்ற அரச சார்பு விழா நிகழ்ச்சி ஒன்றைப் பற்றி எழுதுக.
2. வரைந்து காட்டுக.

   1. தேசியக் கொடியின் படத்தை வரைக.
   தமிழர், சிங்களவர், முஸ்லிம்களைக் குறிக்கும் பகுதிகளை அடையாளம் இட்டுக் காட்டுக.

   2. இன்று நடைமுறையில் இருக்கும் அரச இலச்சினையின் படத்தை வரைக. அதில் இடம் பெற்றுள்ள பொருள்களின் படங்களை வரைக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. நமது நாட்டின் வரலாறு

[ பாடப் பொழிப்பு ]

முன்பு பாடசாலை வரலாறு, கிராமத்தின் வரலாறு, நகரத்தின் வரலாறு என்பன பற்றியெல்லாம் தெரிந்திருக்கின்றீர்கள். அவ்வரலாறுகளைத் தொகுப்பதற்கு உதவக்கூடிய மூலாதாரங்களைப் பற்றியும் அறிந்துள்ளீர்கள். இனி நாட்டின் வரலாற்றுக்கு ஆதாரமான மூலாதாரங்களைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

## 12 - 1 நாட்டின் வரலாற்றுக்குரிய மூலாதாரங்கள்

[ பாடப் பொழிப்பு ]

நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்ளப் பல ஆதாரங்கள் வேண்டும். நாட்டார்கதைகள், புராண இதிகாசக் குறிப்புகள், பாளிமொழியில் அமைந்துள்ள மகாவமிசம் போன்ற நூல்கள், யாத்திரிகர்களின் குறிப்புகள், புராதன கட்டடங்களின் சிதைவுகள், அகழ்வாராய்ச்சித் தடயங்கள் என்பன அவற்றுட் சிலவாகும்.

## 12 - 2 நாட்டுக் கதைகள்

[ பாடப் பொழிப்பு ]

இலங்கையின் குடியேற்ற நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டுக் கதைகள் பல தோன்றின. இயக்கர், நாகர், இராக்கதர் முதலியவர்கள் கதைகளும் விசயன் கதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான கதைகளாகும்.

### 12 - 2 - 1 இயக்கர்

[ பாடப் பொழிப்பு ]

இயக்கர் குபேரனின் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். குபேரன் விச்சிரவசுவின் மகன். இவன் புட்பக விமானத்தை வைத்திருந்தான். இராவணன் அதனைக் கவர்ந்து கொண்டான் என்பர். குவேனி என்பவள் இயக்கர் இனத்தைச் சேர்ந்தவள் என்று வரலாற்று நூல்கள் கூறும். குவேனியை விசயன் என்னும் அரசகுமாரன் மணந்து கொண்டான். விசயன் இலங்கைக்கு வந்தபோது அவள் நெசவு செய்து கொண்டிருந்தாள் என்று கூறப்படுகின்றது.

### 12 - 2 - 2 நாகர்

[ பாடப் பொழிப்பு ]

நாகர் என்னும் பழங்குடி மக்கள் பண்டை நாளில் வட இலங்கை முற்றும் வாழ்ந்தனரென்பர். யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள நயினாதீவு, நாகதீவு என்று அழைக்கப்பட்டது. புத்தர் ஞானம் பெற்றபின், சூலோதரன், மகோதரன் என்னும் [illegible] இடையே மணி ஆசனம் ஒன்றன் காரணமாகச் சச்சரவு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி

ஏற்பட்டது என்பர். புத்தர் நாகதீவத்துக்கு எழுந்தருளி அவர்களுக்கு இடையே ஏற்பட்ட பிணக்கைத் தீர்த்துத் தருமோபதேசமும் செய்து வைத்தார். இவ்வாறே மற்றுமொரு முறை இந்நாளில் களனி என்று அழைக்கப்படும் கல்யாணபுரிக்கும் வந்து தருமோபதேசம் செய்ததாகக் கூறுவர்.

## 12 - 2 - 3 இராக்கதர்

[ பாடப் பொழிப்பு ]

மிகப்பழைய காலத்தில் இராக்கதர் என்னும் சாதிபார் இலங்கையில் வாழ்ந்தனர். வீணைக்கொடியோனாகிய இராவணன் அவர்களின் வேந்தனாகத் திகழ்ந்தான். இவன் சிறந்த சிவபத்தன். இராவணனின் தந்தை விச்சிரவசு என்பவன். இராவணன் கடும் தவம்புரிந்து நீண்ட ஆயுளும் வாளும் பெற்றிருந்தான். இவன் மனைவி மண்டோதரி. இவள் சிவனிடம் பேரன்பு பூண்டவள். இராவணன் சாமகானம் இசைப்பதில் வல்லவன். சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலை மலையையே பெயர்த்த பலசாலி. இலங்காபுரியில் இருந்து அரசு புரிந்தான். தாயின் அந்தியக் கிரியையை நிகழ்த்துவதற்காக கன்னியாய் வெந்நீரூற்றை நிறுவுவித்ததாகக் கூறுவர். இராமன்தேவி சீதா பிராட்டியார் காரணமாக உண்டான போரில் இராவணன் வீரசுவர்க்கம் அடைந்தான்.

## 12 - 2 - 4 சிங்கபாகுவின் கதை

[ பாடப் பொழிப்பு ]

சிங்கபாகு என்பவன் மேற்கிந்தியாவில் உள்ள லாலா நாட்டை ஆண்ட ஒரு அரசன். இவனுடைய வரலாறு மகாவமிசம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. மிகமிகப் பழைய காலத்தே வங்கதேசத்தில் ஒரு மன்னன் இருந்தானும். அவனுடைய மகள் அரண்மனையில் இருந்து புறப்பட்டுக் காட்டு மார்க்கமாகச் சென்றாளாம். அவள் காட்டில் நின்ற சிங்கம் ஒன்றுக்கு மனைவியாகி வாழ்க்கை நடத்தினளாம். சிங்கத்துக்குப் பிறந்த பிள்ளையே சிங்கபாகு என்பவன். இவன் பின்னர் தனது தந்தையாகிய சிங்கத்தைக் கொன்றுவிட்டு அங்கிருந்தும் தப்பிக் கொண்டான். லாலா நாட்டுக்கு அரசனானான். சிங்கபாகுவின் மனைவி சிங்கசீவல்லி என்று கூறப்படுகின்றாள். சிங்கபாகுவின் மூத்த மகன் விசயன் என்று அழைக்கப்படுகின்றார். விசயன் என்னும் அரசகுமாரனின் சந்ததியில் வந்தவர்களே சிங்களவர்.

## 12 - 3 நூல்கள்

[ பாடப் பொழிப்பு ]

இலங்கையில் சிங்களவர் குடியேறி நாடு நகரங்களை அமைத்து வாழ்ந்து வந்தனர். வருகின்றார்கள். அவ்வாறே தமிழர்களும் அடிநாள் முதல் வாழ்ந்து வருகின்றார்கள். மற்றும் முஸ்லிம் பறங்கியர்களும் அவ்வாறே வசித்து வருகின்றனர். இவர்களின் பழைய வரலாறுகளைப் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவர்களுக்கு. பிக்குகளால் பாளி மொழியில் எழுதப்பட்ட கதைப்போக்கில் அமைந்த நூல்கள் சில உண்டு. அவற்றுள் தீபவமிசம், மகாவமிசம், சூளவமிசம், முதலியன குறிப்பிடக் கூடியன. மகாவமிசத்தை மஹாநாமன் என்னும் புத்தபிக்கு கி. பி. 6 ஆம் நூற்றாண்டளவில் எழுதினானென்பர். இவ்வாறே தமிழர்களுடன் தொடர்புபட்ட வரலாறுகளை யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாணச் சரித்திரம் மற்றும் பாண்டியர் சோழர் வரலாறுகளில் இருந்தும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. மேலும் கி. பி. 5 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வருகை தந்த சீன யாத்திரிகன் பாகியன் எழுதிய குறிப்புகள் கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் வந்த கியூங்காஙின் குறிப்புகள் முதலியனவும் உதவுகின்றன.

13 ஆம் நூற்றாண்டினரான இத்தாலிய நாட்டு மார்க்கோபோலோ என்னும் யாத்திரிகனின் குறிப்புகளிலும் 14 ஆம் நூற்றாண்டினரான சோபிதர் என்னும் கிரேக்க நாட்டறிஞரின் குறிப்புகளும், மொறக்கோ நாட்டு இப்னுபதூதாவின் குறிப்புகளும் இலங்கை வரலாற்றை அறிய உதவுகின்றன. கி. மு. இரண்டாம் நூற்றாண்டினரான டலமியின் தேசப்படக் குறிப்பும் பெரிதும் பயன்படுகின்றது.

## 12 : 4 கல்வெட்டுகள்

[ பாடப் பொழிப்பு ]

பண்டைய வரலாற்றை அறிவதற்கு கல்வெட்டுகளும் உதவுகின்றன. முன்னை நாளில் அரசர்கள் தங்கள் கட்டளைகளையும், அற ஒழுக்கங்களையும் பிறவற்றையும் கல்லில் எழுதிவைத்தல் பெருவழக்கமாகும். தாமிரம், செப்புத்தகடு, பொற்றகடு முதலியவற்றிலும் பொறித்து வைத்தல் உண்டு. கல்வெட்டைச் ''சிலாசாசனம்'' என்று கூறுவதும் உண்டு

இவ்வகையில் பொலநறுவை, அனுராதபுரம், வல்லிபுரம் முதலிய இடங்களில் கிடைத்த கல்வெட்டுக்களைக் குறிப்பிடலாம்.

## 12 - 5 நீர்ப்பாசனத் திட்டங்கள், கட்டடங்கள், கலைப்பொருள்கள், நாணயங்கள் முதலியன


[ பாடப் பொழிப்பு ]

பழைய தமிழ்ப் புலவர்கள் அரசர்களை வாழ்த்தும் போதெல்லாம் குளங்களை அமைத்துதவுங்கள். அங்ஙனம் குளங்களை அமைத்தவர்களின் புகழே நின்று நிலவும் என்று வாழ்த்தி உள்ளனர். இலங்கை ஒரு விவசாய நாடு. இங்குள்ள மக்களின் உணவில் நெல்லரிசிச் சோறே அதிக பங்கு வகிக்கின்றது. எனவே இலங்கை அரசர்கள் குளந்தொட்டுவளம் பெருக்கி மக்கள் நல்வாழ்வுக்கு உதவினர்.

புராதன தலைநகரங்களில் சிதைந்து கிடக்கும் பல்வேறு கட்டடங்கள் தம் கதையைக் கூறுகின்றன. விகாரைகளும் கோவில்களும் தேவாலயங்களும் பிறவும் கலை அமிசம் நிறைந்தனவாக விளங்குகின்றன. மேலும் நாணயங்கள் மூலமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பிரதான குளங்களும் கால்வாய்களும்




## பயிற்சி

1. பின்வருவன சரியாயின் சரி (√) எனவும் பிழையாயின் பிழை (X) எனவும் அடையாளமிடுக.

   1. நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்ளப் பல ஆதாரங்கள் வேண்டும். (..........)
   2. குபேரனின் தந்தை விச்சிரவசு என்பவனாகும். (..........)
   3. புத்தர் பெருமான் நாகதீவத்துக்கு எழுந்தருளவில்லை. (..........)
   4. கன்னியாய் வெந்நீர் ஊற்றைக் குபேரன் அமைப்பித்தான் என்பர். (..........)
   5. சிங்கபாகு ஒரு சிங்கத்துக்குப் பிறந்தவன் என்று கூறுகிறார்கள். (..........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மகாவமிசம் என்னும் நூலை மகாநாமன் என்னும் பௌத்தபிக்கு எழுதினான். (..........)

7. பாகியன் என்னும் யாத்திரிகன் மொறக்கோ நாட்டைச் சேர்ந்தவன். (..........)

8. பொலநறுவை இலங்கையின் புராதன தலைநகரங்களுள் ஒன்று. (..........)

II. சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.

1. மகாவமிசம் என்னும் வரலாற்று நூல் எழுதப்பட்ட மொழி :
( சிங்களம் / பாளி / சம்ஸ்கிருதம் / தமிழ் )

2. விசயனின் முன்னோரின் மரபு :
( இயக்கர் / நாகர் / ஆரியர் / வேடர் )

3. நாகதீபமென அழைக்கப்படும் தீவு :
( வேலணைத்தீவு / நயினாதீவு / அனலைதீவு / புங்குடுதீவு )

4. இராவணன் மனைவி :
( பதுமகோமளை / சுமித்திரை / மண்டோதரி / கௌசலை )

5. சிவபெருமான் வீற்றிருந்து அருள் புரியும் மலை :
( சமந்த கூடம் / கந்தமாதானம் / சக்கரவாளம் / கயிலை )

6. சிங்கபாகுவின் மனைவி பெயர் :
( பர்வதவல்லி / சிங்கசீவல்லி / ஆரவல்லி / சூரவல்லி )

7. மார்க்கோபோலோவின் காலம் :
( கி. பி 7 ஆம் நூற்றாண்டு / கி. பி 13 ஆம் நூற்றாண்டு / கி. பி 5 ஆம் நூற்றாண்டு
கி. பி 14 ஆம் நூற்றாண்டு )

8. முதல் முதல் உலகப்படத்தை வரைந்தவர் :
( மகேலன் / வாஸ்கொடகாமா / டாலமி / கலீலியோ )

9. பண்டைநாளில் அரசர்கள் அற ஒழுக்கங்களையும் கட்டளைகளையும் எழுதி வைத்தது :
( நினைவுச்சின்னம் / சிலாசாசனம் / புதைபொருள் / செப்புத்தகடு )

III. சுருக்கமான விடை தருக.

1. மணி ஆசனம் காரணமாக பிணக்குற்ற இருவரது பெயர்களையும் கூறுக.

..........................................................................................

2. இராவணன் பெரும்புலமை பெற்றிருந்த கலை எது ?

..........................................................................................

3. விசயன் என்னும் அரசகுமாரன் எம்மரபைச் சேர்ந்தவன் ?

..........................................................................................

4. யாழ்ப்பாணத் தமிழர்களுடன் தொடர்புபட்ட வரலாற்றைக் கூறும் நூல் எது ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..........................................................................................

5. இப்னுபதூதா என்னும் யாத்திரிகர் எந்த நாட்டினர் ?

..................................................................................................................

6. வல்லிபுரம் என்னும் இடம் எந்த மாகாணத்தில் இருக்கின்றது ?

..................................................................................................................

தொழிற்பாடு :

1. இராவணனின் கதையை எழுதுதல்.

2. பின்வரும் நீர் நிலைகளை அமைப்பித்த மன்னர்களின் பெயர்களை எழுதுதல்.

மின்னேரிக் குளம் ..............................................

கலாவாவி ..............................................

பதவியாக் குளம் ..............................................

கந்தளாய்க் குளம் ..............................................

இரணைமடுக் குளம் ..............................................

3. பழையகால நாணயங்களைச் சேகரித்தல்.

4. வரைந்து காட்டுக.

இலங்கையின் புறவுருவப் படம் ஒன்றை வரைந்து பழைய இராசதானிகளைக் குறித்தல்.

# 13. இந்து சமுத்திரத்து நித்திலம்

[ பாடப் பொழிப்பு ]


பெரிய நிலப்பரப்பு கண்டம் எனப்படும். சிறிய நிலப்பரப்பு தீவு எனப்படும். ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா எனக் கண்டங்கள் ஐந்தாகும். பசுபிக்கு, இந்து, அத்திலாந்திக்கு, வடக்கு (ஆட்டிக்கு), தெற்கு (அண்டாட்டிக்கு) எனச் சமுத்திரங்களும் ஐந்தாகும்.

ஆசியாக் கண்டத்தின் தென்புறத்தில் இந்தியத் துணைக் கண்டம் இருக்கின்றது. அதன் தென் திசையில் இந்துசமுத்திரத்தில் இலங்கை இருக்கின்றது. இலங்கையையும் இந்தியாவையும் பாக்கு நீரிணை பிரிக்கின்றது. இலங்கை இந்து சமுத்திரத்தின் முத்து என்று போற்றப்படுகின்றது. இலங்கை மேற்கு நாடுகள் பலவற்றுக்கும் கிழக்கு நாடுகள் பலவற்றுக்கும் இடையே அமைந்திருக்கின்றது அந்நாடுகளுடன் கடல்வழிப் பாதையாலும் வான்வழிப் பாதையாலும் இணைக்கப் பட்டுள்ளது. ஆதிகாலம் தொட்டு உலகின் பலபாகங்களிலும் இருந்து மக்கள் வந்து சென்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்குப் பல பெயர்கள் வழங்கி வருகின்றன: இந்நாட்டிற்கு தமிழ் நாட்டினர் ஈழம் என்றும் இலங்கை என்றும் அழைப்பர். வடமொழியில் சிம்ஹளத்வீபம் எனப்படும். கிரேக்கர்களும் உரோமர்களும் தப்ரபேன் என்றனர். போர்த்துக்கேயர் சைலோன் என்றழைத்தனர். ஆங்கிலத்தில் சிலோன் என அழைப்பர். இப்பொழுது ஸ்ரீ லங்கா என வழங்குகின்றது.

இலங்கையின் கடற்கரை முற்றும் ஒருபடித்தாக இல்லை. கரையோரங்கள் உள்வளைந்தும் வெளியே புறப்பட்டும் காணப்படுகின்றன. கரையோரங்களில் பல குடாக்கள் உண்டு. குடாவின்வாய் அகன்றிருக்கும். கரையோரங்களில் கடலுடன் நேரடியாக தொடர்பற்ற உவர்நீர் நிலைகள் உண்டு; அவை அளங்கள் என்று கூறப்படும்.




மேலும் கடற்கரையில் துறை முகம், முனை, சேற்றுநிலம், அரங்கம், தீவு என்பனவும் காணப்படும். யாழ்ப்பாணத் தீபகற்பத்தை அடுத்து வேலணைத் தீவு, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, காரைதீவு முதலிய பல தீவகங்கள் உண்டு.

நமது நாட்டிலுள்ள நீர்கொழும்பு, கல்கிசை, பென்தோட்டை, கிக்கடுவை, பாசிக்குடா, கீரிமலை, சவுக்கந்துறை (கசுரணபீச்) முதலிய கடற்கரைப் பகுதிகள் உல்லாசப் பயணிகள் விரும்பிக் களிக்கும் இடங்களாக அமைந்துள்ளன.

சமதரைப் பகுதிகள் :

கடற்கரைப் பகுதியில் இருந்து நாம் உள் நாட்டுக்குப் போகும்போது முதலில் சமதரைப் பகுதியைக் காண்கின்றோம். சமதரைப் பகுதியிலுள்ள நிலம் படிப்படியாக உயர்ந்து செல்கின்றது. ஆங்காங்கு சிறு மலைகளும் குன்றுகளும் காணப்படுகின்றன. உயரமான பகுதியை குன்று என்கின்றோம். இவ்வகையில் கதிர்காமம், சிகிரியா முதலிய இடங்களிலுள்ள குன்றுகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்தியமலைப் பிரதேசம்:



இலங்கையின் மத்திய பகுதி மலைப் பிரதேசம் ஆகும். இப்பகுதி அண்ணளவாக முந்நூறு மீற்றருக்கு மேலான உயரமுடையது.

மத்திய பகுதியில் உள்ள மலைகளைப் பின்வருமாறு பிரிக்கலாம். அவை சிவனொளிபாத மலைத்தொகுதி, அப்புத்தளை நமுனுகுல மலைத்தொகுதி, பேதுறுதாலகாலை மலைத்தொகுதி, நக்கிள்ஸ் மலைத் தொகுதி என்பனவாம். இலங்கையில் மலைகளில் பேதுறுதாலகாலை மிகவும் உயர்ந்ததாகும். அதன் உயரம் 2524 கிலோ மீற்றர் ஆகும்.

## ஆறுகள் :

இலங்கையில் 100 க்கும் அதிகமான ஆறுகள் உண்டு. யாழ் குடாநாட்டில் ஆறுகள் இல்லை என்பதை அறிவீர்கள். பெரும்பாலான ஆறுகள் மத்திய மலைகளில் தொடங்கி, கடலை நாடி ஓடுகின்றன. மலைகளிலும் குன்றுகளிலும் பெய்யும் மழை நீர் ஒன்று சேர்ந்து ஆறாக உருவெடுக்கின்றது. மாவலி, களனி, களுகங்கை, வளவகங்கை ஆகிய ஆறுகள் சிவனொளிபாதமலையில் ஊற்றெடுக்கின்றன. ஆறு ஓடும் வழியில் சரிவு திடீரென அதிகரிக்கும் போது நீர் வீழ்ச்சி உண்டாகும். றன்னல்ல, துன்கிந்த, விக்டோறியா, பம்பரக்கந்தை, லக்சபான அபடின் முதலியன நமது நாட்டில் காணப்படும் நீர்வீழ்ச்சிகளுள் சிலவாகும். நீர் வீழ்ச்சியின் உதவி கொண்டு நீர்மின் சத்தி உற்பத்தி செய்யப்படுகின்றது.

மலைநாட்டில் உள்ள பேராதனை, வதுளையை அடுத்துள்ள ஹக்கலை என்னும் இடங்களில் பெரிய பூந்தோட்டங்கள் உண்டு. இவை வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைப் பெரிதும் கவர்கின்றன. கோட்டன் சமவெளி இயற்கை எழில் நிறைந்தது. கண்டி இலங்கையின் புராதன தலைநகரங்களுள் ஒன்று. நுவரெலியா சிறந்த சுக ஸ்தலமாகும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 - 1 இலங்கையின் காட்டு வளங்கள்

[ பாடப் பொழிப்பு ]

நமது நாடு வெப்பவலயத்தில் அமைந்திருக்கின்றது. இங்கு வருடம் முழுவதும் அதிக வெப்பமும் நல்ல மழையும் கிடைக்கின்றன. மரஞ் செடி கொடிகள் செழித்து வளர்கின்றன.

மரஞ் செடி கொடிகள் இயற்கையாக வளர்ந்து காணப்படும் இடம் காடு என்று அழைக்கப்படும். நீர்வளம், நிலவளம் முதலியவற்றைப் போல காட்டு வளமும் ஒரு நாட்டுக்கு இன்றியமையாததாகும்,

குடியிருப்புத் தேவைகளுக்காகவும் புதிய நகரங்களை அமைப்பதற்காகவும் பயிர்ச் செய்கைக்காகவும் மற்றும் எரிபொருள் தேவைகளுக்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன, இப்போது எமது நாட்டில் காடுகள் குறைந்துள்ளன.

மரங்களை வளர்க்கும் முயற்சி ஊக்குவிக்கப்படுகின்றது. அழிக்கப்படாது எஞ்சியிருக்கும் இயற்கைக் காடுகளுக்கு ஒரு எடுத்துக் காட்டாகச் சிங்கராச வனத்தைக் கூறலாம். காடுகள் மனிதனுக்கு மட்டுமன்றி விலங்கு, பறவை, ஊர்வன முதலியவற்றுக்கும் மிகவும் இன்றியமையாதனவாய் இருக்கின்றன. உறைவிடமாகவும் உணவு உதவும் இடமாகவும் அவை இருப்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

காட்டு விலங்குகள் அழிந்து விடாமல் இயற்கைச் சூழலில் பாதுகாப்புடன் வாழ்வதற்கு இக்காலத்தில் புகலிடங்கள் அமைக்கப்படுவது வழக்கமாகி விட்டது. இவற்றைச் சரணாலயங்கள் என்று கூறுகிறார்கள். நமது நாட்டில் யால, வில்பத்து முதலிய இடங்களில் மிருகங்களுக்குச் சரணாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றைவிடப் பறவைகளுக்கும் சரணாலயங்கள் அமைக்கின்றார்கள். நமது நாட்டில் குமண என்னும் இடத்தில் பறவைகள் சரணாலயம் உண்டு.

## பயிற்சி

I. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. நான்கு புறமும் நீர்சூழ்ந்துள்ள நிலப்பரப்பு ;
   [ கண்டம் / குடாநாடு / தீவு / முனை ]
2. சமுத்திரங்களுள் மிகவும் பெரியது ;
   [ அத்திலாந்திக்கு / பசுபிக்கு / இந்து / ஆர்ட்டிக்கு ]
3. இலங்கைக்கு கிரேக்கர் இட்டபெயர் ;
   [ தப்ரபேன் / சிலோன் / ஈழம் / ஸ்ரீ லங்கா
4. கடலுடன் நேரடியாகத் தொடர்பற்று உவர்நீர் உடையதாய்க் கரை ஓரங்களில் உள்ளவை ;
   [ அனங்கள் / குதாக்கள் / முனைகள் / நீரிணைகள் ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இலங்கையில் உள்ள மலைகளில் அதிகம் உயர்ந்த மலை :
( ஸ்ரீ பாதமலை / பேதுறுதாலகாலை / கிரிகலப்பொத்த / நமுனகுலகல )

6. இலங்கையில் உள்ள நதிகளில் மிகவும் நீண்டது :
( மாவலி / களனி / உடவளவை / கனகராயன் )

7. இலங்கையில் பெரிய பூந்தோட்டம் அமைந்துள்ள ஓரிடம் :
( கொழும்பு / பேராதனை / கண்டி / மாத்தளை )

8. விலங்குகளின் புகலிடம் அமைந்துள்ள ஓரிடம் :
( மிகுந்தலை / யாலை / குருநாகல் / தம்பதெனியா )

9. லக்சபானா நீர் வீழ்ச்சியைக் கொண்ட ஆறு :
( மாவலி / களனி / வளவை / கல்லோயா )

10. உயரத்துக்கு ஏற்ப வேறுபட்டுத் தோன்றும் நில உறுப்புக்களின் அமைப்பு :
( மலைச்சாரல் / மேட்டுநிலம் / பள்ளத்தாக்கு / தரைத்தோற்றம் )

4. சுருக்கமான விடை தருக.

1. பெரிய நிலப்பரப்பு எவ்வாறு அழைக்கப்படுகின்றது ?

..............................................................................................................

2. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை எது ?

..............................................................................................................

3. போர்த்துக்கேயர் இலங்கையை எப்பெயரால் வழங்கினர் ?

..............................................................................................................

4. மூன்று பக்கமும் கடல் சூழ்ந்த நிலப்பரப்பு எவ்வாறு அழைக்கப்படுகின்றது ?

..............................................................................................................

5. நீர் வீழ்ச்சி உண்டாகக் காரணம் என்ன ?

..............................................................................................................

6. ஹக்கலைப் பூந்தோட்டம் எங்கே இருக்கின்றது ?

..............................................................................................................

7. மரஞ் செடி கொடிகள் இயற்கையாக வளர்ந்து காணப்படும் இடம் எவ்வாறு அழைக்கப் படுகின்றது ?

..............................................................................................................

8. சரணாலயம் என்று எதனைக் கூறுகின்றோம் ? சரணாலயம் அமைந்துள்ள இடம் ஒன்று கூறுக

..............................................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பாடு :

1. உல்லாசப் பயணிகளைக் கவரும் கடற்கரை இரண்டின் பெயர்களை எழுதுதல்.
2. இலங்கையில் உள்ள மூன்று மலைகளின் பெயர்களை எழுதுதல்.
3. பிரதான நதிகளில் உள்ள நீர்வீழ்ச்சிகளின் பெயர்களை எழுதுதல்.
4. விலங்குகளின் சரணாலயங்களின் பெயர்களை எழுதுதல்.
5. நமது நாட்டில் காணப்படும் மிருகங்கள் பறவைகளின் பெயர்களை அட்டவணைப் படுத்தல்.


வரைந்து காட்டுக.


(1) இலங்கையின் புறவுருவப் படத்தில் பின்வருவனவற்றைக் குறித்தல்.
ஒருமுனை, ஒருகுடா, ஒருதீவு, ஒருகளப்பு
(2) இலங்கைப் படத்தில் பிரதான மலைகளையும், ஆறுகளையும் குறிக்கவும்.

# 14. நாட்டு மக்களும் மனிதச் செயற்பாடுகளும்

[ பாடப் பொழிப்பு ]


இலங்கை மக்களை இனம், மதம், மொழி என்பன தொடர்பாக தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர் என வகைப்படுத்திக் கூறலாம். இவர்களுக்கிடையே உணவிலே பழக்கவழக்கங்களிலே சமய விழாக்களிலே வேறுபாடுகள் பல உண்டு. இலங்கையரின் குடிசன அடர்த்தியைக் காட்டும் வரைபடங்களை அவதானியுங்கள்.





இலங்கையர்களை இந்து, பௌத்தம், இஸ்லாம், றோ. க., றோ. க. அல்லாதவர்கள் ஏனையோர் என சமய அடிப்படையில் பகுத்துக்கொள்ளலாம். கீழே உள்ள வரைபடத்தைக் கவனியுங்கள். இவ்வாறு பல வேறுபாடு உடையவர்களாய் இருந்த போதும் அனைவரும் இலங்கை மக்கள் என்றே அழைக்கப்படுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 14 - 1 விவசாயமும் கைத்தொழிலும்

[ பாடப் பொழிப்பு ]

இலங்கை ஒரு விவசாய நாடாகும். இங்கு மக்களின் நுகர்வுக்கு வேண்டிய பயிர் வகைகளும் விவசாயத்திற்கு வேண்டிய பயிர் வகைகளும் உற்பத்தி பண்ணப் படுகின்றன. நுகர்வுப் பயிர்கள் மக்களின் பிரயோசனத்துக் காகவே பயிரிடப்படுகின்றன. அவை தானிய வகை, கிழங்கு வகை, மரக்கறி வகை, பழவகை முதலியனவாம். தானிய வகையுள், நெல் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இலங்கை மக்களின் பிரதான உணவு சோறாகும். அரிசி நெல்லில் இருந்து பெறப்படுகின்றது. இலங்கையில் சிறுபோகம் பெரும்போகம் ஆகிய இருபோகங்களில் நெல்லைப் பயிரிடுகின்றார்கள். ஏப்ரல் ( சித்திரை ) முதல் செப்ரெம்பர் (புரட்டாதி) வரையும் உள்ள காலம் சிறுபோகம். ஒக்டோபர் (ஐப்பசி ) முதல் மார்ச் (பங்குனி) வரையும் உள்ள காலம் பெரும் போகம்.




மழை நீர், ஆற்று நீர், குளத்து நீர் முதலியவற்றைக் கொண்டு நெல் விளைவிக்கப்படுகின்றது. நெற்பயிர் சமநிலத்தில் விளைகின்றது. மலைநாட்டில் படிக் கட்டு வரிசையாகப் பயிரிடப்படுகின்றது. குருநாகல், பொலநறுவை வ அநுராதபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம் முதலிய உலர்வலயப் பிரதேசங்களிலும் களனி, கொழும்பு, களுத்துறை முதலிய ஈரவலயப் பகுதிகளிலும் கண்டி மாவட்டத்திலும் பயிரிடப்படுகிறது. தற்போது மாவலி ஆறு திசைதிருப்பப்பட்டு உலர் பிரதேசத்தில் அதிகளவு நெற்செய்கை ஊக்குவிக்கப்பட்டுள்ளது.




வியாபாரத்துக்குரிய பயிர் வகைகளைப் பணப்பயிர்கள் என்கின்றோம். இத்தகைய பயிர்களுள் தேயிலை, இறப்பர், தென்னை ஆகியன மிகவும் முக்கியமானவை.

## தேயிலை

வர்த்தகப் பயிர்வகையில் நமது நாட்டில்தேயிலை முதல் இடத்தை வகிக்கின்றது. எமது நாட்டில் முதன்முதல் தேயிலைப் பயிர்ச் செய்கையை ஆங்கிலேயர் ஆரம்பித்தனர். இது 2000 அடிக்குக் குறையாத உயரமும் தண்ணீர் வழிந்தோடக் கூடிய மென்சாய்வும் உடைய நிலங்களிலே வளர்கின்றது. தேயிலைச்செடியின் தளிரைக் கையினால் கொய்ய வேண்டி இருக்கின்றது. தளிர்கள் தொழிற்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பலவகையான மாற்றங்களின் பின் உலர்த்தப்பட்டு உபயோகத்திற்கு விடப்படுகின்றது. கண்டி, நுவரெலியா, தலவாக்கொல்லை, நாவலப்பிட்டி, ஹற்றன், பதுளை, பண்டாரவளை, அப்புத்தளை, பலாங்கொடை முதலிய இடங்களில் தேயிலை அதிக அளவில் பயிரிடப்படுகின்றது.



தேயிலை

இலங்கைத் தேயிலையை பெரிய பிரித்தானியா, பாகிஸ்தான், நெதர்லாந்து, மேற்கு ஜேர்மனி, ஈரான், அமெரிக்க ஐக்கிய நாடு, எகிப்து, அவுஸ்திரேலியா முதலிய நாடுகள் வாங்குகின்றன.

## இறப்பர்

இறப்பரையும் ஆங்கிலேயரே நமது நாட்டுக்குக் கொண்டுவந்தார்கள். கடல்மட்டத்தில் இருந்து 1000 அடி உயரமான மலையகப்பகுதியில் இறப்பர் பயிரிடப்படுகின்றது. இறப்பர் மரத்தின் பாலில் இருந்து இறப்பர் செய்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இறப்பர் கேகாலை, கழுத்துறை, இரத்தினபுரி, கொழும்பு காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

எமது நாட்டு இறப்பரில் பெரும் பகுதியை மக்கள் சீனக்குடியரசு வாங்குகின்றது, மேலும் சோவியத் ஒன்றியம், அமெரிக்க ஐக்கிய நாடு, போலந்து, ருமேனியா, பாகிஸ்தான் முதலியன கொள்வனவு செய்கின்றன.







## தென்னை :

தென்னைக்கு கடற்கரைப் பிரதேசம் மிகவும் வாய்ப்பானது. கொழும்பு, குருநாகல், சிலாபம் முதலிய தென்மேற்குப் பகுதிகளை அண்டிய இடங்களில் அதிகம் தென்னந் தோட்டங்கள் உண்டு. கொழும்பில் இருந்து தங்காலை வரையிலான கடற்கரைப் பிரதேசத்திலும், மட்டக்களப்பு யாழ்குடாநாடு முதலிய பகுதிகளிலும் தென்னந் தோட்டங்கள் உண்டு.

## ஏனைய பயிர்கள் :

நமது நாட்டில் குரக்கன், சோளம் முதலியனவும் உபஉணவுப் பயிர்களும் காய்கறி வகைகளும் பயிரிடப்படுகின்றன.

## கைத்தொழில் :

பண்டை நாளில் வனைதல்தொழில், செங்கல் அரிதல், இரும்பினால் வீட்டுப் பாவனைக்குரிய ஆயுதங்கள் செய்தல், நெசவுத் தொழில், ஆபரணவேலை, போன்ற பல கைத்தொழில்கள், நாட்டில் [illegible] அடைந்திருந்தன. [illegible]
குடிசைக் கைத்தொழில் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என மூன்ருகப் பிரிப்பார்கள். குடிசைக் கைத்தொழிலுக்குப் பெரும்பாலும் மனித சத்தியே பயன்படுத்தப்படும். குடிசைக்கைத்தொழில் வீடுகளிலும் சிறு தொழிற் கூடங்களிலும் நடைபெறும். குடிசைக் கைத்தொழிலுக்கு அதிக மூலதனம் வேண்டியதில்லை.

பாயிழைத்தல், கயிறுதிரித்தல், தொப்பிமுடைதல், மரம் முதலியவற்றில் பொம்மைகள் செய்தல் முதலியன குடிசைக் கைத்தொழில்களாகும். சிறு அளவிலான கைத்தொழில் வகையில் உணவுப் பொருள்கள் தயாரித்தல் முதலியன இடம் பெறும். சிறு அளவிலான கைத்தொழிலுக்கு இலகுவான எந்திரங்கள் பயன்படுத்தப்படும். அதிக அளவிலான மூலப் பொருள்களைக் கொண்டு பெரிய பெரிய தொழிற்சாலைகளில் பாரிய எந்திரங்களின் உதவியுடன் பொருள்களைத் தயாரித்தல் பாரக்கைத்தொழில் எனப்படும்.

சீமெந்துத் தொழிற்சாலை, இரும்புருக்குத் தொழிற்சாலை, கடதாசித் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை முதலியன இப்பிரிவைச் சேர்ந்தனவாம். 29 ஆம் பக்கத்தில் உள்ள படத்தைப் பார்க்கவும்.

## 14 : 2 சேவைகள்

[ பாடப்பொழிப்பு ]

கல்வியின் நோக்கம் நற்பிரசைகளை உருவாக்குதல் என்று அறிஞர்கள் கூறுவர். நற்பிரசைகள் ஆவதற்கு அடிப்படைத் தேவைகளாகிய உணவு, உடை, வீடு, முதலியன நன்கு பேணப்படுதல் வேண்டும். அல்லாமலும் சுகாதாரம், நல்ல சூழல், போக்குவரத்து வசதிகள், மின்சாரவசதி என்பனவும் சிறப்பாக இருத்தல் வேண்டும்.

இவற்றைப் பேணுவதற்குப் பலருடைய ஒத்துழைப்பும் வேண்டி இருக்கின்றது. சில சேவைகளை இயற்றுவோர் அவற்றை ஊதியம் கருதிச்செய்கின்றனர். சில சேவைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. எமக்கு உதவுவோர் தமது கடமைகளைச் சரிவர இயற்றினால் தான் நாம் அவற்றின் பயன்களை நன்கு நுகரமுடியும்.

### பயிற்சி

I. கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

1. இலங்கையின் சனத்தொகையில் ................................ அதிக எண்ணிக்கையினராக இருக்கின்றனர்.
   [ தமிழர் / பறங்கியர் / சிங்களவர் / முஸ்லிம்கள் ]

2. பறங்கியர் ........................... சமயத்தினை அனுட்டிக்கின்றனர்.
   [ இந்து / பௌத்த / கிறீத்தவ / இஸ்லாம் ]

3. இலங்கை மக்கள் தங்கள் நுகர்வுக்காக ................................ பயிரிடுகின்றனர்.
   [ தேயிலையை / இறப்பரை / நெல்லை / தென்னையை ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நம்நாட்டில் அதிக வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுத் தரும் பயிர்வகையில் ................................ முதலிடத்தை வகிக்கின்றது.

( தெங்குப்பொருள் / வாசனைப்பொருள் / இறப்பர் / தேயிலை )

5. நமது நாட்டு இறப்பரில் பெரும் பகுதியை ................................ வாங்குகின்றது.

( பெரிய பிரித்தானியா / நவசீனம் / பிரான்சு / அரபுநாடு )

6. குடிசைக் கைத்தொழில்களுள் ................................ ஒன்றாகக் கருதப்படுகின்றது.

( ஆணிகள் செய்தல் / சீமெந்து செய்தல் / இரும்பாயுதங்கள் செய்தல் / கயிறுதிரித்தல் )

7. அரசு இலவசமாகச் செய்யும் சேவைகளில் ................................ சேவையும் ஒன்றாகும்.

( போக்குவரத்து / மின்விநியோகம் / சுகாதாரம் / சந்தைப்படுத்தல் )

8. கல்வித் திணைக்களத்தின் நிருவாகத்தில் ................................ அமைந்திருக்கின்றது.

( வைத்தியசாலை / பாடசாலை / தபால் போக்குவரத்து / வானொலிச் சேவை )

II. சுருக்கமான விடை தருக.

1. இலங்கையை ஆட்சி புரிந்த ஐரோப்பியரின் சந்ததியில் வந்தவர்கள் எப்பெயரால் அழைக்கப்படுகின்றனர் ?

................................................................

2. இலங்கையில் அதிக அளவு மக்கள் பின்பற்றும் சமயம் எது ?

................................................................

3. இஸ்லாமியருடைய பெருநாள் ஒன்று கூறுக.

................................................................

4. பணப்பயிர் ஒன்று கூறுக.

................................................................

5. இலங்கைத் தேயிலையை வாங்கும் நாடுகள் இரண்டின் பெயர் கூறுக.

................................................................

## தொழிற்பாடு

1. நமது நாட்டினரால் பின்பற்றப்படும் மதங்களையும் அவற்றின் சதவீதத்தினையும் அட்டவணைப்படுத்தல்.
2. ஒவ்வொருமதத்தையும் குறிக்கும் பிரதான சின்னங்களின் பெயர்களை அட்டவணைப்படுத்தல்.
3. விசேட தினங்களை சமயரீதியாக ஒழுங்குபடுத்துதல்.
4. புதிய நெல்லினங்களின் வகைகளை எழுதுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம் வரைந்து காட்டுக.

1. இலங்கைப் படத்தில் தேயிலை, இறப்பர், தென்னை பயிராகும் இடங்களைக் குறித்தல்.

விடை தருக.

1. இலங்கையில் தென்னை அதிகமாக வளரும் இடங்கள் இரண்டு கூறுக.

..................................................  ..................................................

2. கைத்தொழிலில் உள்ள மூன்று பெரும் பிரிவுகளும் எவை?

..............................  ..............................  ..............................

3. சீனித்தொழிற்சாலை உள்ள ஒரு இடத்தின் பெயர் தருக.

....................................................................................................

# 15. வேற்றுமையில் ஒற்றுமை

[ பாடப்பொழிப்பு ]

இலங்கை எமது தாய்த்திருநாடு. இங்கே சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், ஆங்கிலேயர் முதலிய பல இன மக்கள் வாழ்கின்றனர். பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறீத்தவம் என்னும் சமயங்கள் வழங்கி வருகின்றன. சிங்களம், தமிழ், ஆங்கிலம் முதலிய மொழிகள் பேசப்படுகின்றன. இவ்வாறு எம்மிடையே வேறுபாடுகள் இருப்பினும் நாம் எல்லோரும் இலங்கையரே. இலங்கை அன்னையின் பிள்ளைகளே! இலங்கை பல்லின மக்கள் வாழும் ஒரு நாடாகும்.

## 15 - 1 வேற்றுமைப்பாட்டின் வரலாற்றுப் பின்னணி

[ பாடப்பொழிப்பு ]

புராதன காலந்தொட்டே இந்த நாட்டில் பல்வேறு இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இங்கு வாழ்பவர்களை சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியத்தமிழர், சோனகர், பறங்கியர், மலாயர் ஏனையோர் என வகைப்படுத்திக் கூறலாம்.

விசயன் வட இந்தியாவில் நின்றும் தோழர்களுடன் இங்கு வந்து குடியேறினன். இவனுடைய சந்ததியில் வந்தவர்களே சிங்களவர் என்று கூறப்படுகின்றது. தமிழர்களும் இலங்கையின் புராதன குடிமக்களே! இத்தமிழர்களை விடப் பிற் காலத்தில் பல்வேறு காரணங்களின் நிமித்தமும் தமிழர்கள் இலங்கைக்கு வந்து குடியேறினர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காகவும் அழைத்து வரப்பட்டனர். முஸ்லிம்கள் வியாபாரம் முதலிய ... ...யின் ... ...வர். பறங்கியர் இலங்கையை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


ஆட்சிபுரிந்த போர்த்துக்கேயர் ஒல்லாந்தரின் சந்ததியினர் ஆவர். மலாயர் ஒல்லாந்தரால் இந்தோனேசியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட யுத்த வீரர்களின் சந்ததியினராம்.


ஆதிகாலத்தில் இருந்து இலங்கையில் பல்வேறு இனத்தவர்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்துள்ளனர். சிங்கள மன்னர்கள் சைவாலயங்களையும் சைவக் குருமார்களையும் பேணினர். தமிழ் மன்னர்கள் பௌத்த விகாரைகளையும் குருமார்களையும் பாதுகாத்து வந்துள்ளனர் என்பதற்குத் தக்க பல ஆதாரங்கள் இருக்கின்றன.


## 15 - 3 பல்வேறு இனத்தவர்களுடைய மதங்கள்


[பாடப்பொழிப்பு]

இலங்கையில் பௌத்தம் சைவம் கிறீத்தவம் இஸ்லாம் முதலிய பல்வேறு சமயங்கள் வழக்கத்தில் இருப்பதை அறிவீர்கள்;









பெரும்பாலான சிங்கள மக்கள் பௌத்த சமயத்தவர்கள். அவர்களில், கிறீத்தவர்களும் உளர்; பௌத்தர்கள் இந்துக் கோவில்களுக்கும் சென்று வழிபடுவதைக் கண்டிருப்பீர்கள். தமிழர்களில் பெரும் பான்மையினர் இந்துக்கள். அவர்களுள் கிறீத்தவர்களும் இருக்கின்றார்கள். முஸ்லிம்கள் இஸ்லாம் மதத்தை அனுசரித்து வருகின்றனர்.

மதங்கள் பலவாக இருப்பினும் அவற்றின் முடிவு ஒன்றேயாகும்; அவை மக்களின் நல்வாழ்வுக்காக மகத்தான பணியை ஆற்றி வருகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி

I. சரியாயின் சரி (√) என்றும் பிழையாயின் பிழை (×) என்றும் அடையாளமிடுக.

1. இலங்கை பல்வின மக்கள் வாழும் ஒரு நாடு. (............)
2. விசயன் தென்னிந்தியாவில் நின்றும் இலங்கைக்கு வந்தான். (............)
3. இலங்கையில் தேயிலைத் தோட்டங்களை ஒல்லாந்தர் அமைப்பித்தனர். (............)
4. சிங்களவரில் பெரும்பான்மையினர் பௌத்த மதத்தவர்கள். (............)
5. மதங்கள் பலவாயினும் அவற்றின் முடிவு ஒன்றேயாகும். (............)

II. சுருக்கமான விடை தருக.

1. எமது நாட்டில் வாழும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்களைத் தவிர சிறுபான்மை இனத்தினர் பெயர்களைக் கூறுக.

...................................................................................................................

2. ஆரிய இனத்தின் சந்ததியினராக இலங்கையில் வாழும் மக்கள் யார்?

...................................................................................................................

3. இந்திய வம்சாவழித் தமிழர் இங்கு யாரால் கொண்டு வரப்பட்டனர்?

...................................................................................................................

4. சர்வதேச மொழியென்று போற்றப்படும் மொழி எது?

...................................................................................................................

5. மலாயர் என்னும் இனத்தினர் பின்பற்றும் மதம் எது?

...................................................................................................................

6. நாட்டு முன்னேற்றத்திற்கு மக்களிடையே எது வளர வேண்டும்?

...................................................................................................................

## தொழிற்பாடு

1. அண்மைக்காலக் குடிசன மதிப்பின்படி இனவாரியான எண்ணிக்கையை அட்டவணை செய்தல்.
2. இந்து மதத்தவர்களின் / கிறீத்தவர்களின் பழக்கவழக்கங்கள் சிலவற்றை எழுதுதல்.
3. எமது நாட்டில் நடைமுறையில் இருக்கும் மதத்தொடு தொடர்புபட்ட பிரசித்திபெற்ற ஆலயங்களின் பெயர்களை அட்டவணை செய்தல்.
4. வெவ்வேறு இனத்தவர்களும் மேற்கொண்டுள்ள சேவைகளை எழுதுதல்.

வரைந்து காட்டுக.

1. இலங்கையில் உள்ள சமயசார்பான தலங்கள் அமைந்துள்ள இடங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதிரிகை வினாத்தாள் - 1

# சமூகக்கல்வி

ஆண்டு 6 நேரம் : 1.30 மணி

## பகுதி I

மிகவும் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. வெற்றி தோல்விகளைச் சமனாகப் பேணும் இயல்பை வளர்க்கும் துறை :
   (1) நடிப்புத்துறை (2) விளையாட்டுத்துறை
   (3) இசைத் துறை (4) வைத்தியத் துறை

2. மனிதனுக்குள்ள அடிப்படைத் தேவைகள் மூன்று :
   (1) பிரயாணம், பொழுதுபோக்கு, உணவு.
   (2) மருத்துவம், சுகாதாரம், பாதுகாப்பு.
   (3) உணவு, உடை, உறையுள்.
   (4) உணவுற்பத்தி, பாதுகாப்பு, கல்வி.

3. பாடசாலைக்கொடி அரைத்தம்பத்தில் பறக்க விடப்படும் ஒரு சந்தர்ப்பம் :
   (1) தாபகர் தினம்
   (2) விளையாட்டுப் போட்டி
   (3) சுதந்திர தினம்
   (4) பாடசாலையுடன் தொடர்புபட்ட பெரியாரின் திடீர் மறைவு

4. கண்டங்களுள் மிகவும் பெரியது :
   (1) ஐரோப்பா, (2) ஆசியா, (3) ஆபிரிக்கா, (4) அவுஸ்திரேலியா.

5. இலங்கையில் அதிக மழை பெறும் பகுதி :
   (1) யாழ்ப்பாணம், குருநாகல் (2) பட்டிப்பளை, பண்டாரவளை
   (3) மன்னார், அம்பாந்தோட்டை (4) கண்டி, மாத்தளை

6. நீரினாலே சூழப்பட்ட சிறிய நிலப்பரப்பு :
   (1) கண்டம் (2) தீபகற்பம் (3) தீவு (4) வளைகுடா

7. பாடசாலையுடன் தொடர்புபட்ட விடயங்களை எழுதி வைக்கும் பதிவேடு :
   (1) தினவரவு இடாப்பு (2) பாடப்பதிவுப் புத்தகம்
   (3) சம்பவத்திரட்டுப் புத்தகம் (4) சேர்வு இடாப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. உயரத்துக்கு ஏற்ப வேறுபட்டுத் தோன்றும் நில உறுப்புக்களின் அமைப்பு :
(1) மலைச்சரிவு (2) பீடபூமி (3) சமநிலம் (4) தரைத்தோற்றம்

9. இரு நிலப்பரப்புக்களைப் பிரித்து நிற்கும் ஒடுங்கிய நீர்ப்பரப்பு :
(1) களப்பு (2) நீரிணை (3) அரங்கம் (4) சிற்றாறு

10. இலங்கையில் பௌத்தர்களும் இந்துக்களும் பொதுவாகக் கொண்டாடும் விழா :
(1) மார்கழி நத்தார் (2) சித்திரைப் புத்தாண்டு
(3) கார்த்திகை விளக்கீடு (4) தைப்பொங்கல்

11. விசயனும் நண்பர்களும் வந்திறங்கிய இடம் :
(1) காலி (2) திருகோணமலை (3) தம்பபண்ணை (4) மாந்தை

12. இலங்கையை முதன் முதல் ஆட்சி புரிந்த ஐரோப்பிய நாட்டினர் :
(1) பிரித்தானியர் (2) ஒல்லாந்தர்
(3) பிரான்சியர் (4) போர்த்துக்கேயர்

13. நமது நாட்டில் முதன் முதல் பௌத்த மதத்தைத் தழுவிய அரசன் :
(1) விசயன் (2) தீசன் (3) வாலகம்பாகு (4) பராக்கிரமபாகு

14. மனித உழைப்பை அதிக அளவில் பயன் படுத்தும் சிறிய அளவிலான தொழில் :
(1) கமத்தொழில் (2) குடிசைக்கைத்தொழில்
(3) தச்சுத்தொழில் (4) மேசன்தொழில்

15. களுகங்கை ஊற்றெடுக்கும் இடம் :
(1) சிவனொளி பாதமலை (2) கிரிகாலப்பொத்தை
(3) பேதுருதாலகாலை (4) நமுனகுலகந்த

16. இராவணனின் கதையைக் கூறும் நூல் :
(1) பாரதம் (2) மகாவமிசம்
(3) இராமாயணம் (4) திருவிளையாடற் புராணம்

17. இலங்கை மக்கள் அனுட்டிக்கும் மதங்களை இறங்கு வரிசையில் அட்டவணைப் படுத்தினால் அமையும் முறை :
(1) இந்து, பௌத்தம், இஸ்லாம், றோ. க, றோ. க அல்லாதது
(2) பௌத்தம், இந்து, இஸ்லாம், றோ. க, றோ. க அல்லாதது
(3) இஸ்லாம், றோ. க, றோ. க அல்லாதது, இந்து, பௌத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. நமது நாட்டில் வனவிலங்குப் புகலரங்கள் உள்ள இடங்கள் :
(1) பேராதனை, ஹக்கலை, கண்டி.
(2) மாங்குளம், புத்தளம், நாத்தாண்டியா.
(3) யாலை, வில்பத்து, குமண.
(4) ஹெந்தலை, மாந்தீவு, அங்கொடை.

19. உலகின் எல்லையென்று அழைக்கப்படுவது :
(1) நுவரெலியாச் சமவெளி (2) கற்றன் சமவெளி
(2) எல்க் சமவெளி (4) ஹோட்டன் சமவெளியின் தெற்குமுனை

20. காசியப்பன் என்ற மன்னன் தனது பாதுகாப்பு அரணை அமைத்துக் கொண்ட இடம் :
(1) மிகிந்தலை (2) தம்பதேனியா (3) கம்பளை (4) சிகிரியா

21. மின்னேரியாக் குளத்தை அமைப்பித்தவன் :
(1) பராக்கிரமபாகு (2) புவனேகபாகு (3) கனிந்தீசன் (4) மகாசேனன்

22. பௌத்த பிக்குமார்களால் எழுதப்பட்ட பரம்பரை பற்றிய கதைகளில் ஒன்று :
(1) இரகுவமிசம் (2) தீபவமிசம் (3) நளோபாக்கியானம்
(4) சாகுந்தலம்

23. நமது நாட்டில் பயிரிடப்படும் பணப்பயிர் ஒன்று :
(1) நெல் (2) வெங்காயம் (3) தேயிலை (4) மரமுந்திரிகை

24. நமது நாட்டில் தோற்பொருள் தொழிற்சாலை அமைந்த ஓரிடம் :
(1) அனுராதபுரம் (2) களனி (3) மட்டக்குழி (4) நாவின்னை

25. முழு நாட்டுக்குமான சட்டதிட்டங்களை அமைக்கும் அமைப்பு :
(1) மாவட்டசபை (2) மாநகரசபை (3) பிரதேசசபை
(4) பாராளுமன்றம்

26. இலங்கை அமைந்துள்ள சமுத்திரம் :
(1) பசுபிக் (2) அத்திலாந்திக் (3) இந்து (4) தென்சமுத்திரம்

27. இலங்கையில் அதி உயர்ந்த மலை :
(1) கிரிகாலப் பொத்தை (2) நமுனகுலகந்த
(2) பேதுருதாலகாலை (4) நக்கிள்ஸ் தொகுதி

28. குவேனி என்பவளின் குலம் :
(1) ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. இஸ்லாம் பெருநாள்களுள் ஒன்று :

(1) விளக்கீடு (2) தைப்பொங்கல் (3) முஹறம் (4) போசன்

30. தரையைப் படிகளைப் போல வெட்டி நெல் பயிரிடப்படும் பகுதி :

(1) கடற்கரைப்பகுதி (2) மலைப்பிரதேசம்
(3) வரண்டபிரதேசம் (4) காட்டுப்பகுதி

## பகுதி 2

விரும்பிய நான்கிற்கு மட்டும் விடை தருக.

1. (அ) தரைத் தோற்றம் என்று எதனைக் கூறுகின்றோம் ?

(ஆ) துறைமுகம், முனை, களப்பு என்பவற்றைப் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

2. (அ) கனிப்பொருள்கள் என்று எவற்றைக் குறிப்பிடுகின்றார்கள் ?

(ஆ) இலங்கையில் அதிகமாக உள்ள இரண்டு கனிப்பொருள்களையும் அவை கிடைக்கும் இடங்களையும் கூறுக.

3. (அ) ஒரு நாட்டின் குறிக்கோளையும், பண்புகளையும் எடுத்துக் காட்டும் மகத்துவமான பொருள்கள் எவை ?

(ஆ) எமது நாட்டின் தேசிய கீதத்தை எழுதுக.

4. (அ) நமது நாட்டில் வாழும் பிரதானமான மக்கள் இனங்கள் எவை ?

(ஆ) நீர் விரும்பிய ஓரினத்தவரின், மொழி சமயம் பழக்க வழக்கம் முதலியன வற்றைக் குறித்துச் சுருக்கமாக எழுதுக.

5. (அ) இலங்கையில் விளைவிக்கப்படும் பிரதான பணப்பயிர்கள் எவை ?

(ஆ) அவற்றுள் ஒன்றைப் பற்றி எழுதுக.

6. (அ) உமது பாடசாலை கிராமத்தின் படத்தை வரைக.

(ஆ) அதில் உள்ள முக்கியமான இடங்களை இலக்கமிட்டுக் காட்டி அவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதிரிகை வினாத்தாள் 2

# சமூகக்கல்வி

ஆண்டு 6 நேரம் : 1-30 மணி

I. பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடு இடுக.

1. விசயன் [ ஆரியர் / திராவிடர் / மங்கோலியர் ] மரபினர்.
2. போர்த்துக்கேயர் [ பறங்கியரை / மலாயரை / அராபியரை ] இங்கு அழைத்து வந்தனர்.
3. இலங்கைக்கு [ தம்பபேன் / மகாகோசலம் / காந்தாரம் ] என்னும் பெயரும் உண்டு.
4. நமது நாட்டில் [ தேயிலை / இறப்பர் / கருப்பு ] ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கின்றது.
5. இலங்கை மக்களில் மிகக் கூடிய பகுதியினர் [ இந்து / பௌத்த / கிறீஸ்தவ ] சமயத்தை அனுட்டிக்கின்றனர்.

II. சரி பிழை கூறுக.

1. கொத்தணி அமைப்பின்கீழ்ப் பல பாடசாலைகள் இணைந்து நடத்தப்படும். [.........]
2. வரலாறு எழுதப்படும்போது கால ஒழுங்கில் முக்கிய நிகழ்ச்சிகள் தொகுத்துத்தரப்படும். [.........]
3. உணவு, உடை, உறையுள் முதலிய அடிப்படைத் தேவைகள் பாடசாலை மூலம் வழங்கப்படுகின்றன. [.........]
4. ஆண், பெண் இருபாலாரும் கல்வி பயிலும் பாடசாலையைக் கலவன் பாடசாலை என்பர். [.........]
5. மாணுக்கர் பாடசாலை நிகழ்ச்சிகளில் தவருது கலந்து கொள்ள வேண்டும். [.........]

III. முதற்பகுதியை முடிப்பதற்குப் பொருத்தமான இரண்டாம் பகுதியைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் அதன் இலக்கத்தையிடுக.

| முதற் பகுதி | இரண்டாம் பகுதி |
|---|---|
| 1. ஒரு பிரதேசத்தில் காணப்படும் வெப்பநிலை, மேகங்களின் இயல்பு, மழைவீழ்ச்சி, ஈரப்பதன் முதலிய வற்றின் தொகுப்பு ............ | [i] சீவனோபாயப் பயிர்களாகும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நெற்பயிர், காய்கறி, கிழங்கு, பழவகை என்பன ........ [ii] காலநிலை என்று கூறப்படும்

3. தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு ........ [iii] மக்களால் தெரிவு செய்யப்படுகின்றார்.

4. நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ........ [iv] தேசியக் கொடி உணர்த்துகின்றது.

5. பல்வேறு இனத்தவர்களும் ஒன்று பட்டு இலங்கையர் என்ற அடிப் படையில் வாழ வேண்டும் என்ற உண்மையை ........ [v] அஞ்சல் திணைக்களம் அதிக அளவில் துணைசெய்கின்றது.

IV. சரியான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக.

1. வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதிக்கும் பண்பு உருவாகும் இடம் :
   [1] விளையாட்டிடம் [3] கல்விக்கூடம்
   [2] நூல்நிலையம் [4] ஆலயம்

2. இலங்கையின் மத்திய பகுதி :
   [1] மலைப்பிரதேசம் [3] மேட்டுநிலம்
   [2] தாழ்நிலம் [4] குன்றுத்தொகுதி

3. கிழக்கு மாகாணத்தின் தலைநகரம் :
   [1] திருக்கோணமலை [3] கொழும்பு
   [2] மட்டக்களப்பு [4] முல்லைத்தீவு

4. உயர் வெப்பநிலையும், உயர் மழைவீழ்ச்சியும், உப்புச்சத்துக் கலந்த ஈரப்பாங்கான மண்ணும் உள்ள இடத்தில் விளையும் பணப்பயிர் :
   [1] இறப்பர் [2] தேயிலை [3] தென்னை [4] கொக்கோ

5. பௌத்தமதம் தோன்றிய இடம் :
   [1] இலங்கை [2] பர்மா [3] இந்தியா [4] சீனா

V. சுருக்கமான விடை தருக.

1. உமது பாடசாலை இருக்கும் தேர்தற்தொகுதி யாது?

........................................

2. அதிபர், ஆசிரியர், மாணவர், பணியாளர் முதலியோர் ஒருங்கு சேர்ந்த அமைப்பு எவ்வாறு அழைக்கப்படும்?

........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பெருந்தோட்டப் பயிர் ஒன்று கூறுக.

..........................................................................................

4. உமது பாடசாலைக் கொடியில் உள்ள மேற்கோள் வாசகம் என்ன?

..........................................................................................

5. ஒரு தாவரத்தின் பிரதான பாகங்கள் எவை?

..........................................................................................

VI. பொருத்திக் காட்டுக:

| | |
|---|---|
| இராவணன் | புராணங்கள் |
| பொலநறுவை | இலக்சபான நீர்வீழ்ச்சி |
| களனிகங்கை | இரேகிகர் |
| சோபிதர் | வெந்நீரூற்று |
| இந்துக்கள் | சோழர் |

VII. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி எழுதுக.

பட்சாலைக் கொடி மாணவர் கடமைகள்

VIII. இலங்கை அரச இலச்சினையின் படத்தை வரைந்து காட்டுக.

# மாதிரிகை வினாத்தாள் 3

# சமூகக்கல்வி

ஆண்டு 6 நேரம் : 1.30 மணி

1. பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக;

1. இலங்கைத் தேசியக் கொடியில் சிவப்புநிறப் பின்னணியில் வாளேந்திய சிங்கம் நிற்கும் பகுதி;
[தமிழரை / சிங்களவரை / முஸ்லிம்களை] குறிக்கின்றது.

2. இந்தியத் துணைக் கண்டத்துக்கு [வடக்கே / தெற்கே / கிழக்கே] இலங்கைத் தீவு அமைந்திருக்கிறது.

3. முழுநாட்டிற்குமான சட்டதிட்டங்களை [பாராளுமன்றம் / மாவட்டசபை பிரதேசசபை] ஆக்குகின்றது.

4. சிமெந்துத் தொழிற்சாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II. சரி பிழை கூறுக.

1. குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தின் காலநிலையை அறிந்து கொள்ள வெப்பநிலை, மழைவீழ்ச்சி, காற்று வீசும் திசை, முகில்களின் அசைவு ஆகிய நிலைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். [......]

2. ஒவ்வொரு பிரதேசத்திற்கும் உரிய தனிப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பது மத்திய அரசின் கடமையாகும். [......]

3. இலங்கை குடியரசானது 1948 பெப்பிரவரி 4 ஆம் தேதியாகும். [......]

4. சூலோதரன், மகோதரன் என்பவர்கள் நாகர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். [......]

5. சூளவமிசம் இலங்கையின் வரலாற்றைக் கூறும் ஒரு நூலாகும். [......]

III. முதற் பகுதியை முடிப்பதற்குப் பொருத்தமான இரண்டாம் பகுதியைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் அதன் இலக்கத்தையிடுக.

| முதற் பகுதி | இரண்டாம் பகுதி |
|---|---|
| 1. தேயிலை, இறப்பர், தெங்குப்பொருள் முதலியன ...................... | [i] மகத்தான தொண்டுகள் புரிகின்றன. |
| 2. கிராம முன்னேற்றச் சங்கங்கள் மக்களின் நலத்துக்கு............ | [ii] வர்த்தகப் பயிர்களாகும். |
| 3. முழு நாட்டிற்குமான சட்ட திட்டங்கள் ...................... | [iii] புதிய அரச இலச்சினை உருவாக்கப்பட்டது. |
| 4. இலங்கை சுதந்திரம் அடைந்த போது ...................... | [iv] பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுகின்றன. |

VI. சரியான விடையைத் தெரிவு செய்க.

1. இலச்சினையில் காணப்படும் வாக்கியம்:
   [1] வாழ்க்கைக்கு வழிகாட்டியாயிருக்கும்.
   [2] பாடசாலைக்குப் புகழ் காட்டுவதாய் அமையும்.
   [3] மக்கள் இடையே ஒற்றுமையை வளர்க்கும்.
   [4] பாடசாலையில் அபிமானத்தை வளர்ப்பிக்கும்.

2. இலங்கையில் வாழும் மக்களின் தொகையால் கூடியவர்:
   [1] தமிழர் [2] சிங்களவர் [3] முஸ்லிம்கள் [4] பறங்கியர்

3. பின்வருவனவற்றுள் யாழ் மாவட்டத்துடன் தொடர்புடையது:
   [1] கருங்கல் [2] [illegible] [3] உலர்மண் [4] செம்மண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இலங்கைக்கு இந்து சமயம் கொண்டு வரப்பட்டது ?

(1) அரேபியாவில் இருந்து (2) சீனாவில் இருந்து
(3) ஐரோப்பாவில் இருந்து (4) இந்தியாவில் இருந்து

V. சுருக்கமான விடை தருக.

1. உங்கள் பிரதேசத்தை நிருவாகம் செய்யும் உள்ளூராட்சிச் சபை எது ?

.................................................................................................

2. பாடசாலை வரலாற்றைத் தொகுப்பதற்கும் பாடசாலையில் இருந்து கிடைக்கக்கூடிய சாதனம் ஒன்றின் பெயர் தருக.

.................................................................................................

3. ஆண்களும் பெண்களும் சேர்ந்து கல்வி பயிலும் பாடசாலை எவ்விதம் அழைக்கப்படுகின்றது ?

.................................................................................................

4. பயிற்சிப் புத்தகத்தில் படங்களை வரையும் போது திசையைக் காட்ட யாது செய்தல் வேண்டும் ?

.................................................................................................

VI. பொருத்திக் காட்டுக.

| | |
|---|---|
| தாலமி | பரந்தன் |
| குமனை | தொப்பி முடைதல் |
| இந்துக்கள் | தேசப்படம் |
| இரசாயனத் தொழிற்சாலை | புராணங்கள் |
| குடிசைக் கைத்தொழில் | பறவைகள் சரணாலயம் |

VII. உமது கிராமத்தைப் பற்றிச் சுருக்கி எழுதுக ?

VIII. உமது கிராமத்தின் படத்தை வரைந்து காட்டுக ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதிரிகை வினாத்தாள் 4

# சமூகக்கல்வி

ஆண்டு - 6

நேரம் : 1-30 மணி

I. பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

1. இஸ்லாமியரின் திருமறை [ குர்ஆன் / திரிபிடகம் / பைபிள் ] என அழைக்கப்படும்.

2. ஐப்பசி முதல் பங்குனி வரையுள்ள காலத்தில் நிகழும் நெற்செய்கை [ படிமுறை நெற்செய்கை / பெரும்போகச் செய்கை / சிறுபோகச் செய்கை ] எனப்படும்.

3. இலங்கையிலே மிகச்சிறு தொகையினராக [ தமிழர் / பறங்கியர் / மலாயர் ] வாழ்கின்றனர்.

4. அழிக்கப்படாது எஞ்சியிருக்கும் காட்டுக்கு ஒரு எடுத்துக்காட்டாக [ சிங்கராச வனம் / விந்தனைக்காடு / வில்பத்துக்காடு ] இருக்கின்றது.

5. தமிழ் நாட்டினர் இலங்கையை [ ஈழம் / சிங்களத்துவீபம் / நாகதுவீபம் ] என அழைப்பர்.

II. சரி பிழை கூறுக.

1. ஒரு குடும்பத்தின் முன்னேற்றத்திற்கு அதன் அங்கத்தவர்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் முக்கியம். [.........]

2. இலங்கையின் முதலாவது மன்னனை விசயனின் வருகையைக் குறிப்பதாகக் கருதப்படும் உருவம் சீயகிரியில் உண்டு. [.........]

3. இலங்கை 1972 ஆம் ஆண்டில் குடியரசாயிற்று. [.........]

4. நாக தீபத்தின் தலைவன் சூலோதரன் என்னும் அரசன் என்று கூறும் வரலாறு உண்டு. [.........]

5. களத்துமேடு என்பது வயல்வெளிகளை அண்டிய மணற்பாங்கான சமதரையைக் குறிக்கும். [.........]

III. முதற்பகுதியை முடிப்பதற்குப் பொருத்தமான இரண்டாம் பகுதியைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் அதன் இலக்கத்தையிடுக.

| முதற் பகுதி | இரண்டாம் பகுதி |
|---|---|
| 1. கடற்கரைப் பகுதிகளிலும் ஆற்றங் கரைகளிலும் ............................ | [i] மின்சத்தி பயன்படுத்தப்படுகின்றது. |
| 2. நெசவுத் தொழிலுக்கு இக்காலத் | [ii] நாட்டார் பாடல்களும் உதவு |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனையாகின்றன :

1989

புதிய பாடத்திட்டத்தை முற்றும் தழுவிய

6 ஆம் ஆண்டுக்கான புதிய வெளியீடுகள்

# பாடநூல்களும் பயிற்சிகளும்

1. தமிழ்மொழி அடிப்படை அறிவும் செயல்நெறியும்
2. கணிதப்பயிற்சி ( மிகத் தெளிவான செய்கைமுறை கொண்டது )
3. New Class Work Book for English year 6
4. புதிய விஞ்ஞானம்
   பாடப்பொழிப்பும் தொழிற்பாடும் பயிற்சிகளும்
5. சமூகக்கல்வி
   பாடப்பொழிப்பும் தொழிற்பாடும் பயிற்சிகளும்
6. சுகாதாரக்கல்வி (புதிய வெளியீடு)
7. புதிய விஞ்ஞானம் மதிப்பீட்டுப் பயிற்சி

வெளியீடு :

கு. வி. அச்சகம்

386, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org